Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி 10 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ. ஆகிர் 18 (26.07.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:299

இப்போது நாமே யாழ் நகரிலும்

10-15 நிமிடங்களில்....

பாஸ்போட்,

அடையாள அட்டை படங்கள் மற்றும்

Album Binding

Photo Creations

Duro Laminating

Photo Graphing

Digital Video



MOORTHY STUDIO AND DIGITAL COLOUR LAB

62/16 STANLEY ROAD, JAFFNA. T.P 021-222 2884 JAFFNA ROAD, MANIPAY.

## போருக்கு ஆணையிடுங்கள் தலைவரே நாங்கள் அணிதிரண்டு வருகிறோம்!

### முல்லைத்தீவு மக்கள் பேரணியில் விண்ணதிர கோஷம்

முல்லைத்தீவு —

தமிழ்மக்களுக்கு உரிமைகளை வழங்குவதில் அரசு காட்டிவரும் அசமந்தப்போக்கைக் கண்டித்தும் தமிழ்த் தேசிய விடுதலைக்கான போரை ஆரம்பிப்பதற்கான ஆணையை வழங்குமாறும் கோரி முல்லைத்தீவில் நேற்று மாபெரும் கண்டனப்பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமிழ்த் தேசியத்துக்கான உரிமைக்குரலை எழுப்பினர்.

முல்லைத்தீவு மாவட்ட வெகுஜன அமைப்புக்களும், சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லை மாவட்ட மக்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மாபெரும் கண்டனப் பேரணி நேற்றுக் காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பிருந்தும் - செல்வபுரத்திலிருந்தும் இரு முனைகளில் ஆரம்பமானது.

முல்லை வர்த்தக சங்கத்தினரின் பேரணி முல்லை மாவட்ட வைத்தியசாலையின் முன்பிருந்தும், முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையிலான பேரணி செல்வபுரத்திலிருந்தும் ஆரம்பமாகின.

அரசின் அடக்குமுறைகளுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு இரு பேரணிகளும் முல்லைத்தீவு நகர மின்சார நிலையத்தின் முன்பாக ஒன்றிணைந்தன.

தொடர்ந்து - முல்லைத்தீவு பிரதேச வர்த்தக சங்கத்தின் தலைவர் மனோ தலைமையில் கண்டனக் கூட்டம் ஆரம்பமானது.

முல்லை மாவட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## திசைமாறிய மீனவரை படையினர் கைதுசெய்தனர்

பருத்தித்துறை —

பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் கடலுக்குச் சென்றபோது வழிமாறி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று வந்ததால் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நாகர்கோவில் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.35 மணியளவில் நாகர்கோவில் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினரால் பு.சிவஞானசுந்தரம் (வயது 30), கெங்கசேகரன் (வயது 30), அருணேஸ்வரன் (வயது 25) ஆகிய மூன்று மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் காலை மீன் பிடிப்பதற்காக சுப்பர்மடத்திலிலுருந்து கடலுக்குச் சென்றனர்.

கடலில் திசை தெரியாமல் திரிந்த இந்த மூவரும் ஒருவாறு கரை (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் யோசனைகளை ஏற்க அரசு தொடர்ந்தும் இழுத்தடிப்பு!

### நேற்றைய பேச்சுக்களிலும் முடிவில்லை

திருகோணமலை —

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போராளிகளின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நடைமுறைகள் தொடர்பாக எழுந்திருக்கும் நெருக்கடிக்குத் தீர்வுகாணும் நோக்கில் -

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும்- அரசதரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் சாதகமான முடிவுகள் ஏதும் எட்டப்படவில்லை எனத் தெரியவருகிறது.

நேற்றைய சந்திப்பில் அரசதரப்பு புதிய யோசனைகளை முன்வைத்திருப்பதாகவும் - இதனடிப்படையில் புலிகளுடன் மீண்டும் கண்காணிப்புக்குழு பேசவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்க சமாதான செயலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜெயவர்த்தன மற்றும் முப்படைகளின் தளபதிகள், அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஜோன் செனிவிரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு, போர்நிறுத்தத்தை எதிர்த்து ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்!

## உடன்பாட்டை அமுல்படுத்துவது அரசாங்கத்தின் தார்மீக கடமை!

முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக

தீர்வுகாணும் நோக்கில் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு

நேற்றைய சந்திப்பில் அரசதரப்பு புதிய யோசனைகளை முன்வைத் திருப்

நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு, போர்நிறுத்தத்தை எதிர்த்து ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்!



கொழும்பு —

போர் நிறுத்த உடன்படிக்கை மற்றும் சுனாமி பொதுக்கட்டமைப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. நேற்று பரவலான எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டது.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணிமுதல் 5.30 மணிவரை இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. கொழும்பு கோட்டே ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் சுமார் 1500 இற்கும் மேற்பட்ட ஜே.வி.பி ஆதரவாளர்கள் பங்கேற்றனர். இதைவிட களுத்துறை, புத்தளம், கண்டி, மாத்தளை, மொனராகல, ரத்தினபுரி, அனுராதபுரம் ஆகிய இடங்களிலும் சிறியளவிலான எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்தப் போராட்டங்களில் கலந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# உடன்பாட்டை அமுல்படுத்துவது அரசாங்கத்தின் தார்மீக கடமை!

## முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக

கொழும்பு —

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதமற்ற புலிகளின் நடமாட்டத்துக்கு உடன்பாட்டில் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதால் - ஒப்புக்கொண்டதை நடைமுறைப்படுத்த வேண்டியது. அரசாங்கத்தின் தார்மீக கடமையாகும் என முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஹறி குணதிலக தெரிவித்தார்.

பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

புலிகளால் கேட்கப்பட்ட பாதுகாப்பை அடிக்கடி வழங்குவதென்பது நிச்சயமாக இராணுவத்தின் மீது பயங்கரமான பழியைச் சுமத்தும் நடவடிக்கை. என்றாலும் அவ்வாறான பாதுகாப்பு வழித்துணையை வழங்க ஏற்கனவே ஒப்புக்கொண்டிருப்பதால் அதனைச் தொடர்ச்சியாக வழங்கவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இணைத்தலைமை நாடுகளை சமாளிக்க சந்திரிகா முயற்சி!

கொழும்பு —

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை மற்றும் போர்நிறுத்த உடன்பாடு எத்தகைய நிலையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பன உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து ரோக்கியோ மாநாட்டு இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா விளக்கிக் கூறியிருக்கிறார்.

அமெரிக்கா, ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஐரோப்பிய யூனியன் சார்பில் பிரிட்டிஷ் தூதுவர் ஆகியோரை நேற்று கொழும்பில் சந்தித்துப் பேசியபோதே சந்திரிகா இவ்வாறு விளக்கமளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இணைத் தலைமை நாடுகளின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் - போர்நிறுத்த உடன்பாடு, சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து கடுமையாக எச்சரிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கண்டன அறிக்கை தொடர்பாக மேற்படி நாடுகளுக்கு விளக்கமளிக்கவே இந்தச் சந்திப்புக்கு ஒழுங்குபடுத்தப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் -

சமீபத்தில் நான்கு இணைத் தலைமை நாடுகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமைதி முயற்சிகள் சீர்குலைந்தால் அமெரிக்கா நிதியுதவி வழங்காது!

## எச்சரிக்கை விடுக்கிறார் தூதுவர் லன்ஸ்றீட்

கொழும்பு —

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்து எதிரெதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு - சமாதான சூழ்நிலைக்குப் பாதிப்பு ஏற்படுமானால் - சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கிவிடுவோம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

கொழும்பில் அமெரிக்க நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்றீட் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது -

அமைதியை நிலைநாட்டுவதில் இருதரப்பினரும் பொறுப்புடன் செயற்படவேண்டும். அமைதி யற்ற சூழலில் சுனாமி புனரமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது.

சமாதான நடவடிக்கைகளில் முறிவு ஏற்பட்டால் அல்லது இருதரப்பினருக்குமிடையில் எதிர்நடவடிக்கைகள் இடம் பெறுமாயின் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில் தடை ஏற்படும்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் சுனாமி நிவாரணத் திட்டங்களை நடைமுறைப்படுத்த அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட பகுதிகளில் நில

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொன்விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அதிபர் சிவபாதரத்தினம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கைலாசநாதன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங் கம், ரவிராஜ், கௌரவ விருந்தினர்களாக செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்திட்டப் பணிப்பாளர் செல்வி கரீன் எரிக்சன், சரவணமுத்து ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(72)

# கட்டட பராமரிப்பு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

மானிப்பாய்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கட்டடப் பராமரிப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் பொருட்டு தகுதியுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜீ.எஸ் பலிஹக்காரவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப்பதவிக்கு அடிப்படைத் தகைமைகளாக 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம் உட்பட எண் கணிதத்துடன் ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்கள் கேட்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய முறையில் தயாரித்து அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் குடியரசுக் கட்டடத்திலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு கொழும்பு1 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளிவந்த வர்த்தமானியில் பார்வையிடலாம். (100)

# உதவிப் பணிப்பாளர் இடமாற்றம்

யாழ்ப்பாணம்

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் அடுத்த மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் திணைக்களத்தின் கொழும்பு தலைமையகத்துக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதே வேளை - இதுவரை காலமும் யாழ்.செயலகத்தில் மாவட்ட இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமாக இயங்கிவந்த இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம் விரைவில் பிராந்திய வலயமாக செயற்பட உள்ளதாகவும் தெரியவருகிறது.


## சிறுவிளம்பரம்

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளை யார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை9.00 - 8.30 வரை. (1198)

**வீடு விற்பனைக்கு**

விலாசம்: 16/1 மடம் வீதி, யாழ்ப்பாணம். பரப்பு: ஒரு பரப்பும் 12.54 குளியும்.

குறிப்பு: வீடு சகல வசதிகளுடன் திருத்த வேலையற்றும், இரு குடும்பங்கள் வசிப்பதற்கும் ஏற்றது. தொடர்பு: வி.குலம் 0777 248366, 0777 423614. (1994)

**வைத்தியம்**

எந்த வைத்தியம் பார்த்தும் நோய் தீரவில்லையா? உங்கள் அனைத்து நோய்களுக்கும் மருந்துகள், சத்திரசிகிச்சைகள், ஊசி மருந்துகள் இல்லாமல் வலியின்றிய அக்குபன்ச்சர் சிகிச்சை மூலம் நிரந்தர தீர்வு, ஆலோசனைகள் அனைத்தும் இலவசம்.

(Acu) Dr.R.P.Sankar, M.D.Phd. ஷென்மென் அக்குபன்ச்சர் வைத்தியசாலை, தபால் பெட்டி சந்தி, பலாலி வீதி திருநெல்வேலி (திருநெல்வேலி இலங்கை வங்கி அருகில்) (1995)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!
காதல் புகழ்
பரத், ரேணுகாமேனன்
**பெப்ரவரி 14**
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**ராஜா** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
மகத்தான இரண்டாவது வெற்றி வாரம்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த

**சின்னா**
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**மனோகரா** யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த

**பிரியசகி**
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்
ஷாம், லைலா நடித்த
**உள்ளம் கேட்குமே**
29 முதல் - இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம் ரவி நடித்த **தாஸ்**
காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
ரஜினி, பிரபு, ஜோதிகா, நயந்தாரா மற்றும் பலர் நடித்த
**சந்திரமுகி**
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)


# வடக்கு-கிழக்கில் பின்தங்கிய மக்களுக்கு சுகாதார சேவைகள் சென்றடையவில்லை

## தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி

வடக்கு-கிழக்கில் அபிவிருத்தியடையாத பின்தங்கிய பிரதேச மக்களுக்கு சுகாதார சேவைகள் மற்றும் குடும்பநல சேவைகள் உரிய முறையில் சென்றடையவில்லையென தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்ரமன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிறுவனமும், குடும்பநல பணியகத்தினரும் கலந்து கொண்ட தாய்-சேய் நலன் மேம்பாட்டுக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 2000ஆம் ஆண்டின் தொனிப் பொருளாக சகலருக்கும் சுகாதாரம் எனும் கூற்று உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று அரசியல் மற்றும் சமூகச் செல்வாக்குகள் காரணமாக சாதாரண மக்களை சுகாதார வசதிகள் சென்றடையவில்லை.

மனிதாபிமான அடிப்படையில் குடும்ப சுகாதாரத்தையும் மற்றும் சுகாதார சேவைகளையும் நோக்க வேண்டும். கடந்த காலங்களில் குடும்ப சுகாதாரம் உயர் தரத்தில் பேணப்பட்டது. ஆனால் இந்தச் சேவைகள் வடக்கு - கிழக்கு உள்ளடக்கிய அபிவிருத்தியடையாத பிரதேசங்களைச் சென்றடையவில்லை.

சுகாதார சேவைகள் சகல மனிதர்களுக்கும் உரித்தானது. இது யுத்தம் உட்பட எந்தவிதமான பேராபத்துக்களாலும் பாதிக்கப்படக்கூடாது. ஆனால் இந்த நாட்டின் வடக்கு கிழக்கில் சுகாதார சேவைகள் வழங்க முடியாமைக்கு யுத்தத்தை ஒரு சாட்டாக இலங்கை அரசு காட்டி வருகிறது.

கடந்த காலங்களில் குறைந்த அளவிலாவது சுகாதார சேவைகளை வழங்குவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களும், எமது வளங்களும் உதவி புரிந்தது. இதனால் குறைவான வளங்களுடன் மற்றும் அதியுயர் அர்ப்பணிப்புடனும் சுகாதாரம் வடகிழக்கில் குறிப்பிடத்தக்களவு பேணப்பட்டு வந்துள்ளது.

யுத்தத்தின் பின் சர்வதேச நிதிகளிலிருந்தும் ஏனைய கடன்களிலிருந்தும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளுடன் மக்களுடைய சுகாதார வசதிகளை முன்னேற்றுவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம்.

எனினும் அரசுடன் இணைந்து கடமை புரியும் அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதிகளைச் சமனாகப் பிரிப்பதிலும் மற்றும் அவர்களுடன் கடமை புரிவதிலும் நாங்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றோம்.

குறிப்பாக வடக்கிற்கு உலகப் பிரசித்திபெற்ற யுனிசெப்பின் பூகோள நிதியிலிருந்து சிறிதளவு நிதி மாத்திரம் விடுவிக்கப்பட்டிருக்கிறது. வடக்கின் கிராமப் பகுதிகளில் குடும்பநல உத்தியோகத்தர்களுக்காக உலக சுகாதார நிறுவனம் (WHO) வழங்கிய 200 உந்துருளிகளில் ஒரு சில மட்டும் போக்குவரத்து வசதி குறைந்த வடக்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இனங்காணப்பட்ட பிரதேசங்களின் வளங்களை முன்னேற்றுவதன் ஊடாக இந்த நிலையை திருப்திகரமாக மாற்றுவதற்கு சுகாதார சேவைத் திட்டங்களை உரிய வகையில் மாற்றுவதே ஒரே வழியாகும்.

அதியுயர் பதவிப் பணிநிலையில் உள்ளவர்கள் மனிதாபிமான ரீதியிலும் மற்றும் எந்தவித வேறுபாடுகளுமின்றியும் திட்டங்கள் வரையவும் சேவை புரியவும் வேண்டும் எனத் தெரிவித்தார்.

## தேசிய கல்வியியற் கல்லூரி நடத்திய

# ஆரம்பக்கல்விஆசிரியர்களுக்கிடையிலான கற்பித்தல் சாதனம் உருவாக்கல் போட்டி முடிவு

யாழ்ப்பாணம்

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி கற்றல், கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையம் நடத்திய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதனம் உருவாக்கல் போட்டியில்-அதிவிசேடம், விசேடம், சாதாரணம் ஆகிய தரங்களில் சித்தியடைந்தவர்களின் விபரங்களை வெளியிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையில் ஆரம்பக் கல்வி ஆசிரியரின் வான்மைத்துவத்தை வளர்த்து, கற்றல், கற்பித்தலில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தப் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு -

### முதன்மைநிலை 01

திருமதி சூ.துரைசிங்கம் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்), திருமதி இ.நவரத்தினராசா (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), திருமதி தி.டொனா அல்பிறட் (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

**விசேடம்**

திருமதி சி.ஞானசேகரம் (ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்ம), திருமதி இ.வேணுகாந்தன் (இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை), திருமதி மா.மகேந்திரன் (சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை), தி.சுகுமாரன் (இணுவில் இந்துக் கல்லூரி), வே.அன்பழகன் (இந்து ஆரம்பப் பாடசாலை)

**சாதாரணம்**

திருமதி மேரிபெனிக்ணாபிலிப் (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), தி.சுகுமாரன் (இணுவில் இந்துக் கல்லூரி), திருமதி உ.திருச்சபேசன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி த.சாரதா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி இ.இராஜேஸ்வரன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி கு.விஜிதா (தொல்புரம் விக்னேஸ்வரர் வித்தியாலயம்), இராஜசேகரம் (கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம்), திருமதி ஜெ.சிவநடராஜா (கரணவாய் தாமோதர வித்தியாலயம்), தெ.புவனேந்திரன் (கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்), த.சுகந்தினி (நாரந்தனை றோ.க.வித்தியாலயம்)

### முதன்மைநிலை -02

**அதிவிசேடம்**

ஞா.அன்ரன் பிறேமதாஸ் (உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்), திருமதி பா.போல்கமல்ராஜ் (உரும்பிராய் சந்திரோதயாவித்தியாலயம்), திருமதி ந.த.தயாளஜெயன் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்)

**விசேடம்**

திருமதி அ.சந்திரசேகரம் (கரந்தன் இராமப்பிள்ளை வித்தியாலயம்), கு.திலகவதி (இந்து மகளிர் ஆரம்பபாடசாலை), மைதிலி மார்க்கண்டு (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திரு மதி ம.உதயகுமார் (இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை), திருமதிந.ட.தயாளஜெயன் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்)

**சாதாரணம்**

மஞ்சுளா நாகராஜா (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மயூரதி லோகேஸ்வரன் (பன்னாலை சேர். கனகசபை அ.த.க பாடசாலை), திருமதி பு.மனோகரன் (உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்), திருமதி.ரி.ரி.அன்ரன் கிறேசியன் (சுன்னாகம் றோ.க.த.கபாடசாலை), திருமதி.வ.பாலச்சந்திரன் (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), செ.கபிரியேல்பிள்ளை (உரும்பிராய் றோ.க.த.கபாடசாலை), இ.சுபாசினி (கட்டுடை சைவ. வித்தியாலயம்), திருமதி.ச.சிவலிங்கம் (உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை), மயூரதி.லோகேஸ்வரன் (பன்னாலை சேர் கனகசபைஅ.த.க. பாடசாலை), திருமதி.த.சுப்பிரமணியம் (தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்)

### முதன்மை நிலை 3

**அதிவிசேடம்**

திருமதி.இ.லோகேஸ்வரன் (கரந்தன் ராமுப்பிள்ளை வித்தியாலயம்), திருமதி.ம.உதயராசா (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), ம.மீனலோசனி (உயரப்புலம் மெ.மி.த.க பாடசாலை)

**விசேடம்**

யாழினி அருளானந்தம் (திருக்குடும்ப கன்னியர்மடம்), வே.அன்பழகன் (இந்து ஆரம்பப் பாடசாலை), அன்ரனி புறூனோ (இந்து ஆரம்ப பாடசாலை), யசோதா பிரேம்குமார் (திருக்குடும்பக் கன்னியர் மடம்) , த.யோகராஜா (கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம்), அ.டோறா பான்சி (புதுமடம் றோ.க.த.க பாடசாலை).

**சாதாரணம்**

திருமதி.ந.கேதீஸ்வரன் (கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம்), திருமதி.வ.அருட்செல்வன் (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), திருமதி பா.போல்கமல்ராஜ் (உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்), திருமதி தெ.கொலின் (பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க.த.கவித்தியாலயம்), க.சுபாசினி (நாரந்தனை றோ.க.ம. வித்தியாலயம்), திருமதி நி.நந்தினி (நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), திருமதி.ந.கேதீஸ்வரன் (கோண்டாவில் இராமகிஷ்ணா ம.வித்தியாலயம்), திருமதி.பூ.வரதராசா (அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை), யாழினி அருளானந்தம் (திருக்குடும்ப கன்னியர் மடம்), அ.டோறாபான்சி (புதுமடம் றோ.க.த.கபாடசாலை)

**கணினி பிரிவு**

த.தயாபரன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை), திருமதி.உ.சிவபுத்திரன் (யாழ். மத்திய கல்லூரி), திருமதி.சி.கணேசநாதன் (யாழ். மத்தியகல்லூரி),

**விசேடம்**

த.பிரியலஷ்மி (யாழ். மத்திய கல்லூரி), க.சுமதி (யாழ். மத்தியகல்லூரி), யோ.மடோனா யாழ். மத்திய கல்லூரி), யோ.ஜெறுசியா (யாழ். மத்திய கல்லூரி).

# போராட்டத்தின் உண்மைத்தன்மையை சர்வதேசத்துக்கு உணர்த்தியுள்ளோம்

## தளபதி கேணல் பானு

மட்டக்களப்பு



விடுதலைப் புலிகளின் போராட்டம் பற்றிய உண்மைத்தன்மையையும், நேர்மைத்தன்மையையும், தமிழ் மக்கள் மீது நடக்கின்ற கொடுமைகள் பற்றியும் கடந்த மூன்று வருட காலத்தில் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தியிருப்பதைவிட வேறு எதனையும் இந்தக் காலத்தில் பெற்றிருக்கவில்லை. இதை சர்வதேசமும் உணர்ந்திருக்கிறது என, மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு - கரடியனாறு பகுதியைச் சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட 66 வறிய குடும்பங்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமீபத்தில் ஏற்பட்ட சுனாமி அழிவால் மட்டக்களப்பு மாவட்டம் பெரும் சேதத்தையும், அழிவையும் சந்தித்தது. அதேபோன்று அம்பாறையில் தமிழ்மக்கள் பெரிய அழிவைச் சந்தித்தனர்.

ஆனால், அந்த மக்களுக்கு நிவாரணப் பணியை மேற்கொள்ள அனைத்துலக நாடுகளும் வழங்கிய பல உதவிகளை இன்று இலங்கை அரசு முடக்கிவைத்திருக்கிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் இருக்க இடமில்லாமல் கொட்டகைகளுக்குள்ளும், வெயிலிலும், கொட்டும் மழைக்குள்ளும் இருந்து, தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண் டிருக்கும் பொழுது, மறுபக்கம் யுத்தக்கப்பல்களை வாங்குகிறார்கள்.

சமாதானத்தைப் பேசிக்கொண்டு யுத்தக் கப்பலை வாங்குகிறார்கள். ஆயுதங்களை வாங்குகிறார்கள். குண்டு போடுகிற விமானங்களை வாங்குகிறார்கள். சமாதானத்தைத் தொடர்வது என்றால் இவையெல்லாம் அவர்களுக்கு ஏன் என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

## பாலியல் வல்லுறவு வழக்கில் தேடப்படும் பௌத்த பிக்கு!

கொழும்பு

பாலியல் வல்லுறவு வழக்குத் தொடர்பாக ஜோதிடம் கூறி வந்த பிரபல பௌத்த பிக்கு ஒருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

18 வயது இளம்பெண்ணுக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, தனது விருந்தினர் மாளிகையில் வைத்து அவரை வல்லுறவு கொண்டதாக சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த அந்தப் பிக்கு மீது குற்றம் சாட்டப்பட்டது.


இது குறித்து புலத்கொக்குபிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணவர்த்தன கருத்துத்தெரிவிக்கையில் -

பாதிக்கப்பட்ட பெண்ணும், அவரது தாயாரும் பௌத்த பிக்குவை சந்திக்கச் சென்றுள்ளனர். அப்போது இளம் பெண்ணை மிரட்டி பாலியல் வல்லுறவு கொண்டதாகக் கூறப்படுகிறது.

சிங்கள நடிகைகளுடனும் முறையற்ற பாலுறவு வைத்திருந்ததாகவும், பல இளம்பெண்களை இவர் சீரழித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# ரணில் ஜனாதிபதியாக வந்தால் சுதந்திரக்கட்சி அழிந்துவிடுமாம்

## அமரசிறி தொடங்கொட கூறுகிறார்



கொழும்பு

ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றால் - சிறிலங்கா சுதந்திரக் கட்சி அழிந்தே போய்விடும் என்று பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவை அறிவித்தால், அவரைத் தோற்கடிக்க ஒரு குழுவினர் சதித்திட்டம் தீட்டியுள்ளனர். ஜனாதிபதியின் அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றால், அடுத்த 20 ஆண்டுகளுக்கு சுதந்திரக் கட்சியால் ஆட்சி அதிகாரத்தைப் பெறமுடியாது.

மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்க திட்டம் தீட்டுகிற சுதந்திரக் கட்சியினர், ஐக்கிய தேசியக் கட்சி அடையப்போகும் பலன்கள் குறித்துச் சிந்திக்கவில்லை.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீதான சுனாமி நிவாரண நிதி மோசடிக்குற்றச் சாட்டுக்களுக்குச் சில தொழிலதிபர்கள் ஊடகங்கள் மற்றும் சுதந்திரக் கட்சியில் உள்ளவர்களும்தான் காரணம். அரசு அதிகாரிகள் செய்த தவறுக்காக மஹிந்த ராஜபக்ஷவை குற்றம் சாட்டக்கூடாது. இதே போன்ற ஒரு நிலையில்தான் 1977 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றினார்.

17 ஆண்டுகளுக்குப் பிறகு தான் சுதந்திரக் கட்சியால் அதிகாரத்துக்கு வர முடிந்தது. அனுரா பண்டாரநாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா குமாரதுங்க அறிவிக்க முடிவெடுத்தால், அது மிகவும் தவறான முடிவாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்க டொலர்களை அச்சிட்ட வெளிநாட்டவர் கொழும்பில் கைது

கொழும்பு

கல்கிசைப் பிரதேசத்திலுள்ள வீடொன்றில், அமெரிக்க டொலர்களைச் சட்டவிரோதமாக அச்சிட்டுக்கொண்டிருந்த வெளிநாட்டவர் இருவரை கடந்த வெள்ளியன்று அதிகாலை கல்கிசைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் பாலி மற்றும் லைபீரிய இனத்தவர்களெனவும், அவர்களால் குறித்த வீடு வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட காலம் முதல் வர்த்தகர்களிடமிருந்து இலங்கையின் பணத்தைப்பெற்றுக் கொண்டு இரண்டு மடங்கு அமெரிக்க டொலர்களை வழங்குவதாகக் கூறி, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

வர்த்தகர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்து, இந்த இருவரும் கைது செய்யப்பட்டதுடன், சட்டவிரோதமாக அச்சிடப்பட்டிருந்த ஆறு லட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்களும், இவற்றை அச்சிடப்பயன்படும் 2 ஆயிரத்து 400 தாள்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

இவர்கள் இருவரும் தமது இந்த வியாபாரத்தை வவுனியா, காலி மற்றும் கொழும்பு பிரதேகங்களில் நடத்தியதாக விசாரணையிலிருந்து தெரியவந்தது. (தே)

# தனியார் மயமாக்குவதில்லை என எழுத்து மூலம் உறுதி வழங்கவும்

## மின்சார சபை தொழிற்சங்கங்கள் கோரிக்கை

கொழும்பு

குறைந்தது இரண்டு வருடகாலப்பகுதியினுள் இலங்கை மின் சாரசபையை தனியார் மயமாக்குவதில்லை என எழுத்துமூலமான உறுதி வழங்கப்பட வேண்டும் என, ஜே.வி.பியின் கட்டுப்பாட்டினுள் உள்ள இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள், மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவைக் கோரியுள்ளன.

தமது வேண்டுகோள் நிராகரிக்கப்படும் பட்சத்தில், கடந்த புதன்கிழமை அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மின்சாரசபையின் சீரமைப்புத் திட்டத்தை அமுல்செய்யத் தாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என ஜே.வி.பியின் தொழிற்சங்கத் தலைவர்கள் எச்சரித்தனர்.

அமைச்சர் எமது வேண்டுகோளுக்கு இணங்க மறுத்தால், கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

இதேவேளை, மறுசீரமைக்கும் பணிகள் திட்டமிட்டதுபோல அமைச்சால் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

இந்தப் பணிகளுக்கு சில தொழிற்சங்கங்களும் ஆதரவு வழங்கியுள்ளன.

# சமாதானத்தை முன்னெடுப்பதில் அரசு முனைப்புக் காட்டவில்லை

## ராஜித சேனாரட்ண குற்றச்சாட்டு

கொழும்பு



அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் முனைப்புக் காட்டவில்லை எனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண - அரசாங்கத்தின் அசமந்தப் போக்கால் நாட்டில் மீண்டும் போர் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

திருகோணமலையில் அமைக்கப்பட்ட புத்தர்சிலை தொடர்பாக எழுந்த சிறிய பிரச்சினைக்கே தீர்வு காணமுடியாத ஜனாதிபதி சந்திரிகாவால், நாட்டில் பல ஆண்டுகளாக நீடிக்கும் இனப்பிரச்சினைக்கு எவ்வாறு நிலையான தீர்வைப் பெறமுடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

சந்திரிகா தனது பதவியை அடுத்த ஒரு வருடத்துக்கு வைத்திருப்பதற்குப் பாடுபடுகிறார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதிக்கான வேட்பாளராகத் தன்னை நியமிப்பதற்கு உதவுமாறு தனக்கு நெருக்கமானவர்களிடம் மன்றாடி வருகிறார்.

இதேவேளை, அமைச்சர் மங்கள சமரவீர தனது நண்பர்களான ஜே.வி.பியினரை மீண்டும் அரசாங்கத்தில் சேர்ப்பதற்கு முயற்சி செய்து வருகிறார். இதன் மூலம் அரசாங்கத்துக்கு நாட்டுமக்கள் மீதுள்ள அக்கறை என்ன என்பது தெளிவாகத் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சந்திரிகா கைதுசெய்ய திட்டமிடுவதால்

# சோமவன்சவை அமைதியாக இருக்கும்படி ஜே.வி.பியின் அரசியல் சபை ஆலோசனை!

கொழும்பு

தங்க மோசடி, கொலைகள் மற்றும் பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் - ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவைக் கைதுசெய்வதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்ற தகவல் உறுதியானதைத் தொடர்ந்து, அரசியல் ரீதியாக அவரை அமைதியாக இருக்கச் செய்வதற்கு ஜே.வி.பி தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கமைய பொதுக்கூட்டங்களில் அவர் கலந்துகொள்வதைக் குறைப்பதற்கும் ஜே.வி.பி தீர்மானித்துள்ளது. அவ்வாறில்லாமல், அவர் பொதுக்கூட்டங்களில் பங்குபற்றினாலும் ஜனாதிபதியைத் தாக்குகின்ற விதமான பேச்சுகளை தவிர்த்துக்கொள்ளுமாறு ஜே.வி.பியின் அரசியல்சபை, சோமவன்சவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இவ்வாறு செய்வதன்மூலம் - ஜனாதிபதி, ஜே.வி.பி மற்றும் சோமவன்ச மீது கொண்டுள்ள கோபம் தணிந்து, அவர் அமைதியடைய வேண்டுமென்பது ஜே.வி.பியின் எதிர்பார்ப்பு.

சோமவன்சவை கைதுசெய்யப்படும் நடவடிக்கையிலிருந்து தப்பிக்க வைக்கும் சரியான வழி - ஜனாதிபதியை விமர்சிப்பதைக் குறைப்பதே என்பது ஜே.வி.பியின் அரசியல் சபையின் முடிவாகும்.

இதேவேளை, ஜே.வி.பி தலைவரைக் கைதுசெய்யும் நடவடிக்கை அரசாங்க உயர்மட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.



இந்த நிலையில், நிலைமை மோசமடையுமாக இருந்தால், அதற்குமுன் நாட்டைவிட்டுத் தப்பிச்செல்லுதல் பொருத்தமானதென ஜே.வி.பியின் அரசியல் சபை, சோமவன்சவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# முரளியின் சுழற்பந்து வீச்சில் சுருண்டது மேற்கிந்திய அணி!

## 240 ஓட்டங்களால் படுதோல்வி



கண்டி

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 240 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதல் இனிங்ஸில் 150 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது.

நேற்றுமுன்தினம் இரண்டாவது இனிங்ஸில் ஆடத்தொடங்கிய இலங்கை அணி நேற்று 7 விக்கெட் இழப்புக்கு 375 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது.

ஜெயசூரிய 36, அத்தபத்து 19, ஜெயவர்த்தன 43, சமரவீர 0, டில்சான் 49, விஜேகோன் 12, வாஸ் 19, சங்கஹார ஆட்டமிழக்காமல் 157, ஹேரத் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் லோசன் 3, பவல் 2, பாங்ஸ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து மொத்தம் 526 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் முதல் இனிங்ஸ் ஸ்கோர் 148 உடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆடத் தொடங்கியது.

ஆனால், முரளிதரனின் சுழற்பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்கள் சுருண்டுபோனதால் 137 ஓட்டங்களை மட்டுமே எடுத்த நிலையில் ஆட்டமிழந்தது.



மார்ஷல் 1, ராம்தாஸ் 23, மோரொரன் 9, சந்தர்போல் 24, ஜோசப் 0, டியோநரேய்ன் 29, ரம்டீன் 28, பாங்ஸ் 1, பவல் 0, பெஸ்ட் 8, லோசன் ஆட்டமிழக்காமல் 1 ஓட்டத்தை எடுத்தனர்.

பந்துவீச்சில் முரளிதரன் 8 விக்கெட்டுக்களையும், மலிங்க மற்றும் ஹேரத் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

### முத்தரப்பு போட்டி

# இந்தியாவுடனான ஆட்டத்தில் வாஸ் ஆடுவது சந்தேகம்!

கண்டி


தசைப் பிடிப்பு காரணமாக இந்தியாவுக்கு எதிரான முதல் கிரிக்கெட் போட்டியில் இலங்கை வீரர் வாஸ் ஆடுவது சந்தேகம் தான் என்று அணியின் உடற்பயிற்சியாளர் தெரிவித்தார்.

இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் வாஸ். மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக ஆடி வரும் வாஸ் நேற்றுமுன்தின ஆட்டத்தின்போது 19 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இவர் துடுப்பெடுத்தாடிய போது, தசைப்பிடிப்பு காரணமாக பெரிதும் அவதிப்பட்டார். இதனால் அவர் துடுப்பெடுத்தாடியபோது மாற்று ஆட்டக்காரரின் உதவியுடன் வாஸ் ஆடினார். தசைப் பிடிப்பு காரணமாக முத்தரப்பு முதல் ஆட்டத்தில் வாஸ் ஆடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த நிலையில் வாஸின் காயம் குறித்து இலங்கை அணியின் உடற்பயிற்சியாளர் கிளார்க் கூறுகையில் -

வாஸ் தசைப் பிடிப்பினால்



அவதிப்பட்டு வருகிறார். அவருக்கு 7 முதல் 10 நாட்கள் ஓய்வு தேவை. எனவே அவர் இந்தியாவுக்கு எதிரான முதல் ஆட்டத்தில் ஆடுவது சந்தேகம்தான் என்றார்.

# முத்தரப்பு தொடருக்கான இலங்கையணி அறிவிப்பு!

கண்டி

முத்தரப்பு கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. புதுமுக வீரர்கள் 2 பேர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய 3 நாடுகளிடையேயான ஒருநாள் போட்டித் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி தொடங்கவுள்ளது. ஓகஸ்ட் 9ஆம் திகதி இறுதிப்போட்டி நடைபெறும்.

3 நாடுகள் போட்டிக்கான இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. 15 பேர் கொண்ட அணியில் உபுல் தாரங்க, டில்ஹார லொக்கு கெடிச் ஆகிய 2 புதுமுக வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

20 வயதான உபுல் தாரங்க இடதுகை தொடக்க ஆட்டக்காரராக ஏ அணியில் அவர் சிறப்பாகச் செயற்பட்டதன் மூலம் அணியில் இடம்பிடித்துள்ளார். டில்ஹார லொக்கு கெடிச் துடுப்பாட்டம் மற்றும் வேகப்பந்து வீச்சில் சிறந்து விளங்குபவர். டில்ஹார பெர்னாண்டோ மீண்டும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை அணி விபரம் வருமாறு -

அத்தபத்து (கப்டன்), ஜெயவர்த்தன, ஜெயசூரிய, குமார் சங்கஹார, உபுல் தாரங்க, திலகரத்ன, டில்சான், ரசல் ஆர்னல்ட், சமிந்தவாஸ், உபுல் சந்தன, முரளிதரன், சொய்சா, டில்ஹார லொக்கு கெடிச், டில்ஹார பெர்னாண்டோ, பர்வீஸ் மஃரூப், லசித் மலிங்க.

### கே.சி.சி.சி. கிண்ண கிரிக்கெட்

# பல்கலை, பற்றீசியன் அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவு!

கொக்குவில்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் கே.சி.சி.சி கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் 30

விளையாட்டு

ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டிகளில் பல்கலைக்கழக அணியும், பற்றீசியன் விளையாட்டுக்கழக அணியும் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 29.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் மணிவண்ணன் 81, அருள்ராஜ் 33, சரவணன் 27, ஜதார்த்தன் 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நாதன், கோபிநாத் ஆகியோர் தலா 3, முரளி 2, லக்சுமிகாந், சாள்ஸ்வரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் 25 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் இந்தப் போட்டியில் 81 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு யாழ்.பல்கலைக் கழக அணி தகுதிபெற்றது.

இதில் ஜொலிஸ்ரார் அணியின் சார்பில் லக்சுமிகாந் 24, யதுகுலன் 21, முரளி 18, சர்வேஸ்வரன் 17, அருண்குமார் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பல்கலைக்கழக அணியின் சார்பில் யதிதரன் 3, அருள்ராஜ் மற்றும் நிசாந்தன் ஆகியோர் தலா 2, செந்தூரன் மற்றும் சர்வானந் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அன்று பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுதர்சன் 49, மதூசன் 23, பிருந்தாபன் 22, கார்த்தீபன் 16, நிசாந்தன் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பற்றீசியன் அணியின் சார்பில் பார்த்தீபன் 4, விநோதன் 2, முகுந்தன் மற்றும் லொயிட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 28.5 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டது.

இதில் முகுந்தன் 30, நயினஸ் 29, லொயிட் 24, சுஜீவன் 21, பார்த்தீபன் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்ரலைட்ஸ் அணியின் சார்பில் பிரகாஸ் 3, பிரசாத் 2, சாள்ஸ் மற்றும் யசிந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். (58)


# முதல் போட்டியில் அவுஸ்ரேலியா இங்கிலாந்தை தோற்கடித்தது!

லண்டன்

லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில்




அவுஸ்ரேலிய அணி 239 ஓட்டங்களால் இங்கிலாந்து அணியை வெற்றிகொண்டது.



420 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி ஆட்டநேரமுடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்கள் என்ற நிலையில் தள்ளாடிக் கொண்டிருந்தது.

ஆனால், நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டம் தொடங்கியதும் இங்கிலாந்து அணிக்கு மக்ராவின் பந்துவீச்சு பெரும் நெருக்கடியாக இருந்தது. பீற்றர்சன் மட்டுமே நிலைத்து நின்று ஆடிக்கொண்டிருந்தார்.

நான்காம் நாள் ஆட்டம் மழை காரணமாக 5 மணிநேரம் தாமதமாகவே தொடங்கியது.

மக்ராவின் வேகப்பந்து வீச்சில் ஜோன்ஸ் 6 ஓட்டங்களுடனும், கைல் ஓட்டமெதையும் பெறாமலும் பவிலியன் திரும்ப நேரிட்டது. இந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது.


பின்னர் மீண்டும் ஆட்டம் தொடங்க மக்ராவின் வேகப் பந்தில் இங்கிலாந்து வீரர்கள் வந்த வேகத்தில் திரும்பிச் சென்றனர்.

180 ஓட்டங்கள் மட்டுமே பெற்றநிலையில் இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பின்வரிசை ஆட்டக்காரர்கள் நால்வர் ஓட்டமேதும் எடுக்காமல் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

பீற்றர்சன் மட்டுமே 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 64 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் மக்ராவும், வோனும் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்ரேலிய அணி, 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.



கனடாவில் உள்ள மொன்ட்றியலில் சனிக்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைந்த நீச்சல் போட்டியில் பூ போல கையை விரித்து திறமையை வெளிப்படுத்தும் ரஷ்ய குழுவினர். இவர்களுக்கே தங்கப் பதக்கம் கிடைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



**கனடாவின் மொன்ட்றியலில் நடைபெற்றுவரும் உலக நீச்சல் போட்டியில், சனிக்கிழமை நடைபெற்ற 10 மீற்றர் பிளாட்பார்ம் டைவிங்போட்டியில் - திறனை வெளிப்படுத்துகிறார் சீனாவைச் சேர்ந்த ஹூ ஜியா. இவருக்கே இந்தப் பிரிவில் தங்கப் பதக்கம் கிடைத்தது. ஹூ ஜியா ஒலிம்பிக் சம்பியன் என்பதும் குறிப்பிடத்தக்கது.**

## தமிழீழ விளையாட்டு வீரர்கள்

# சர்வதேச மட்டப் போட்டிகளிலும் பங்கேற்பதற்கு தேசியத்தலைவர் வசதிகளை ஏற்படுத்தியுள்ளார்!

## கோப்பாய் அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்பரிதி

யாழ்ப்பாணம் ——

எமது விளையாட்டு வீரர்கள் உள்ளூர்ப் போட்டிகளில் மட்டுமல்ல, சர்வதேச அரங்கிலும் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும் என, கோப்பாய் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் து.செம்பரிதி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் - விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து பேசுகையில் -

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற தேசியத் தலைவர் - போராட்டத்தோடு மட்டுமல்லாது, எமது வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு சர்வதேச ரீதியான வெற்றிகள் படைப்பதற்கும் வழிவகுத்துக் கொண்டிருக்கிறார்.

எமது தாயகப் பிரதேச விளையாட்டு வீரர்கள் மாகாண, தேசிய மட்டப் போட்டிகளுக்காக வெளிமாவட்டங்களுக்குச் செல்லும்போது, பல வழிகளிலும் புறக்கணிக்கப்படுகிறார்கள். அண்மையிலும் கூட 31 ஆவது தேசிய விளையாட்டு விழாவுக்காக கொழும்பு சென்ற வீரர்களுக்குத் தங்குமிட வசதி ஒதுக்கப்படாததால், இரவுப்பொழுதை மைதானத்தில் கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

எமது இனத்தின் மீது எந்தெந்த வழிகளில் புறக்கணிக்க முடியுமோ, அதே வழிகளில் சிங்களப் பேரினவாதம் புறந்தள்ளிக் கொண்டு இருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுவதும், படுகொலை செய்யப்படுவதும் சமாதான காலங்களிலும் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது.


சிங்களப் பேரினவாதம் சமாதானம் என்ற பெயரில் போராளிகள், பொதுமக்கள் மீது பல அச்சுறுத்தல்களை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலை தொடர்ச்சியாக தொடர்ந்து செல்வதை இனிமேலும் எம்மால் அனுமதிக்க முடியாது.


எமது தாயகப் பிரதேசத்தில் குடி கொண்டுள்ள சிங்கள இராணுவத்தால் பல பாடசாலைகள் விளையாட்டு மைதானங்கள், பொது நிலையங்கள், விளை நிலப்பரப்புகள் என்பவற்றை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் எமது வீரர்கள் சுதந்திரமாக விளையாடுவதற்குக் கூட சிங்கள தேசத்தால் அச்சுறுத்தலாகவே இருக்கிறது.

இதனைவிட, சிங்கள அரசு தமிழர் பிரதேசங்களில் விளையாட்டு மைதானங்கள் புனரமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் போன்ற செயற்பாடுகளில் அக்கறை செலுத்துவதில்லை. எமது வீரர்கள் தேசிய அணியில் இடம்பிடிப்பதற்கு திறமை இருந்தும் - தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக அவர்கள் புறந்தள்ளப்படுகிறார்கள்.

சர்வதேச ரீதியில் எமது வீரர்கள் போட்டியிடுவதற்கு எமக்கெனத் தனி ஒரு அணி அமைத்து, அதனூடாகத்தான் போட்டியிட்டுக் கொள்ளமுடியும்.

தமிழீழ தேசிய அணிகள் பல சர்வதேச அணிகளுடன் போட்டியிட்டு வெற்றிகண்டிருக்கிறார்கள். அனைத்துப் போட்டிகளுக்குமான அணிகள் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி, வெற்றி பெறுவதற்காக வீரர்கள் கடுமையான பயிற்சி செய்யவேண்டும். அதனூடாக சர்வதேச ரீதியில் தமிழீழ தேசிய அணியின் வெற்றிகள் பல படைக்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.





யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் அண்மையில் கற்றல், கற்பித்தல் உபகரண கண்காட்சியில் - கண்காட்சிக்காக வைக்கப்பட்ட ஆக்கங்களை யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் பார்வையிடுவதையும், கண்காட்சியில் வைக்கப்பட்ட ஆக்கம் ஒன்றையும் படங்களில் காணலாம்.

## யாழ்.செஞ்சிலுவைச் சங்கத்தினரால்

# சுகாதாரமும் உளவியலும் திட்டம் 19 பாடசாலைகளில் நடைமுறை!

ஆழியவளை ——

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாடசாலை மட்டத்திலான சுகாதாரமும் உளவியலும் திட்டம் - யாழ்.மாவட்டத்தில் 7 பிரதேச செயலர் பிரிவுகளில், 19 பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்துக்கான நிதியுதவியை டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கி வருகிறது. தெல்லிப்பளை, சாவகச்சேரி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், சங்கானை, கரவெட்டி, வேலணை ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் இந்தத் திட்டம் நடைமுறையிலுள்ளது. இதன் மூலம் சுமார் 1700 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஏனைய பிரிவுகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

# ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

மானிப்பாய் ——

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின், இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு II 'ஆ' இன் ஆய்வுகூட உதவியாளர் பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் - தூய கணிதம், பிரயோக கணிதம், இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் மற்றும் கமத்தொழில் ஆகிய பாடங்களில் சேவைக்கு ஏற்புடையதான இரசாயனவியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன், 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய முறையில் தயாரித்து - அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், சுதந்திர சதுக்கம், கொழும்பு-07 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ஆய்வுகூட உதவியாளர் பதவி எனக் குறிப்பிடப்படல் வேண்டும். இதன் மேலதிக விபரங்களை கடந்த 22 ஆம் திகதிய அரச வர்த்தக மானியில் பார்வையிடலாம். (100)

# நீரிழிவு நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம் ——

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் - நீரிழிவு நிலைய திறப்பு விழா நேற்றுமுன்தினம் சமாதான நீதிவான் வி.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் - இங்கிலாந்தின் இரத்தினம் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் நீரிழிவு நிலையம் அமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி கலந்துகொண்டார்.

நீரிழிவு வைத்திய நிலைய பெயர்ப்பலகையை - நிலைய மூலகர்த்தா இ.சர்வானந்தர் திரைநீக்கம் செய்துவைத்தார்.

நீரிழிவு வைத்திய கட்டடத்தை இங்கிலாந்து இரத்தினம் நிறுவனத்தின் உரிமையாளர் கலாநிதி இ.நித்தியானந்தன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். இந்த நிகழ்வில் வைத்தியசாலை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் புதிய மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டு

நெடுந்தீவு ——

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் புதிய மாநாட்டு மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா - கடந்தவாரம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

சுமார் 30 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த மாநாட்டு மண்டபத்துக்கான அடிக்கல்லை - யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி சம்பிரதாயபூர்வமாக நாட்டிவைத்தார்.

இந்தப் பணிமனைக்கென இதுவரை காலமும் அலுவலகக் கட்டடத்திலுள்ள வசதிகளற்ற பகுதியே, மாநாட்டு மண்டபமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்தப் புதிய மாநாட்டு மண்டபம் மூலம் போதிய இட வசதிகளுடன் கூட்டங்களை நடத்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன், இந்தக் கட்டட வேலைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தினுள் செய்து முடிக்கப்பட்டு, பாவனைக்கு விடப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (113)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : வி.கஜலக்ஸ்சியா
முகவரி : சுன்னாகம்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------
முகவரி ----------
பிறந்த ஆண்டு: ----------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
----------
பெற்றோர் ஒப்பம்











மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட நீரிழிவு சிகிச்சை நிலைய பெயர்ப்பலகையை இ.சர்வானந்தர் திரைநீக்கம் செய்வதையும், நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும், வைத்திய நிபுணர் லாலுகுமார் நீரிழிவு நோயாளி ஒருவரைப் பரிசோதிப்பதையும் படங்களில் காணலாம்.

பல்சுவை அரங்கு


# விடியோ கேம் தேவை



கணினி விளையாட்டுகளால் நிறையத் தீமைகள் இருக்கின்றன என்ற கருத்தை சிறுவர்கள் பற்றி ஆய்வுசெய்பவர்கள் கூறிக் கொண்டு வந்தார்கள். ஆனால் தற்போது, அவர்கள் தங்களுடைய கருத்தை மாற்றிப் பிள்ளைகளுக்கு ரிவி கேம் என்பது மிகவும் நல்லது என்கிறார்கள். பிள்ளைகள் அதிகமாகத் தங்களுடைய நேரத்தை ரிவி பார்ப்பதில் செலவழித்துக்கொண்டு வருகிறார்கள். தொலைக்காட்சியில் தெரிகின்ற, சிறுவர்களுக்கு ஒவ்வாத நிகழ்ச்சிகளிலிருந்து இதன் மூலம் அவர்கள் விடுதலை பெறலாம் எனவும் தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகிறார்கள். விடியோ கேம்கள் உண்மையில் ஒரு சிறந்த பொழுதுபோக்கு சாதனங்கள். அதிலே எந்த விதமான மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் அவற்றின் அழுத்தம் அதாவது - சிறுவர்களைப் பாதிக்கக் கூடாது என்பதுதான் தேவையான ஒன்று.


# புகைத்தல் தடை

மேலை நாடுகளில் பெரும்பாலான பிள்ளைகள், சிகரெட்டும் கையுமாக அலையும் கலாசாரம் தற்போது அதிகரித்துக் காணப்படுகிறது. தங்களுடைய பிள்ளைப்பருவத்திலேயே அவர்கள் இத்



தகைய புகைப் பிடிக்கும் பழக்கத்தைத் தொடங்கினார்கள். 11 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட தொடர் ஆராய்ச்சிகளின் படி, ஆண்டு ஆறுக்குப் பிறகு கூடுதலான மாணவர்கள் புகைப் பிடித்தல் பழக்கத்தைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறார்கள். ஐரோப்பாவில் மட்டும் ஒரு நாளுக்கு 450 மாணவர்கள் வரை புகைப்பிடித்தலைப் பழகிக் கொண்டு வருகிறார்கள். சிறு வயதில் புகைப்பிடித்தல் என்பது - மாணவர்களுக்குக் கேளிக்கையாகவும், அதேவேளை அவர்களுடைய பிற்காலத்துக்கு மிகவும் தீங்கானதாகவும் இருக்கும் என, வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள். வெகுவிரைவில் இங்கிலாந்தில் சிறுபிள்ளைகள் புகைப் பிடிக்கும் தடைச்சட்டம் வர இருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.


# புதிய ஆழ்கடல் உயிரி



தமது ஒளிரும் சிவப்பு உணர் கொம்புகள் மூலம், ஆழ் கடலில் சிறு மீன்களை கவர்ந்திழுக்கும் புதியவகை ஆழ்கடல் வாழ் உயிரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. **Erenna** பிரிவைச் சேர்ந்த இந்த மெல்லுடலிகளுக்கு இன்னமும் பெயர் இடப்படவில்லை. இவை பவளப் பாறை மற்றும் செளலி மீன் இனத்தைச் சேர்ந்தவையாகும். இவற்றின் உணர்கொம்புகள் சிவப்பாக ஒளிரும்போது, இவை இறால் போன்று தோற்றமளிப்பதால், பல மீன்கள் ஏமாந்து இந்த உயிரியருகே வருகின்றன. இவை கண் பார்வையற்ற, புழுப்போன்ற நீள உடல் அமைப்பைக் கொண்டவை.



பசுபிக் கடலில் - 1600 மீற்றர் முதல் 2300 மீற்றர் வரை யிலான ஆழத் தில் இவை காணப்படுகின்றன.



# பறவை கடத்தும் மாசுக்கள்

புதிய ஆய்வுகளின் படி கடல்வாழ் பறவைகள் விவசாய ரீதியாகவும், தொழிற்சாலை ரீதியாகவுமான மாசடைதல்களை ஊக்குவிப்பதாகக் கூறப்படுகிறது. கனடா நாட்டு விஞ்ஞானிகளுடைய ஆய்வுகளின் படி, பறவைகள் - கடல் மற்றும் சமுத்திரங்களில் காணப்படுகின்ற இரசாயனக் கழிவுகளை காவிக்கொண்டு செல்கின்றன. தற்போது உலகளாவியரீதியில் பார்த்தால், இத்தகைய விஞ்ஞானிகளுடைய கருத்துகளின் படி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதேசங்




களில் இந்த இரசாயனக் கழிவுகள் தேங்கிக் காணப்படுகின்றன. ஒட்டாவாப் பல்கலைக்கழகத்தினருடைய ஆய்வுகளின் படி, இரசம், டி.டி.ரி ஆகிய இரசாயனக் கழிவுகளே கூடுதலாக இந்தப் பறவைகளால் கடத்தப்படுவதாக உள்ளன.

அத்துடன் ஐரோப்பிய யூனியனுடைய விஞ்ஞானிகள் - இத்தகைய பறவைகயினங்களைத் தடைசெய்ய வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

# மிருகங்களுக்கு எச்சரிக்கை

சைபீரியாவில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட மிருக இனங்களைப் பாதிப்புக்குள்ளாக்குகின்ற திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய பிரதேசத்தினூடாக ஒயில் குழாய்கள் செலுத்தப்பட இருக்கின்றன. இதற்காக பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவழிக்கப்பட இருக்கிறது. நீண்ட தூரம் செல்லக்கூடிய இந்த ஒயில் குழாய்கள் - காட்டின் சமநிலையில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியனவாக உள்ளன. இவற்றினுடைய ஆரம்பக் கட்டமே பல சிறுத்தை இனங்களை, அந்த இடத்தை விட்டு விரட்டியிருக்கிறது. இந்தத் திட்டம் முதலில் கடலினூடாகவே செய்யப்பட இருந்தது. ஆனால் அதில் ஏற்



பட்ட சிக்கல்கள் காரணமாக, அதைக் கைவிட்டு காட்டிடாக குழாய்களை அனுப்பும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே இந்தக் காடுகளுக்குள் வேட்டைக்காரர்களின் தொல்லை அதிகமாகவுள்ளது. இந்த நேரத்தில் இந்தத் திட்டத்தின்மூலம் பல மிருகங்கள் குறையவும் வாய்ப்புள்ளது.

# ஆபிரிக்காவின் இரு பகுதிகள் முக்கியத்துவமானதாக பிரகடனம்

தென்னாபிரிக்காவிலுள்ள பாரியதும், பழமையானதுமான விண்கல் வீழ்ந்ததில் ஏற்பட்ட **Uredefort Dome** பாரிய வெடிப்பு மற்றும் எகிப்தின் ஏராளமான திமிங்கல எலும்பு புதை படிவங்கள் காணப்படும் **WaDi al - Hitan** என்ற இடமும் உலகில் பாரம்பரிய இடங்களாக ஐ.நா சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.




தென்னாபிரிக்காவின் விண்கல் வீழ்ந்த பாரிய வெடிப்பைக் கொண்ட **Uredefort Dome** பகுதி 190 கிலோ மீற்றர் விட்டத்தைக் கொண்ட, பாரிய குழி உள்ளது. 2 மில்லியன் வருடங்களுக்கு முன் ஏற்பட்ட இந்த குழி- கிரகங்களின் தோற்றம் குறித்த ஆய்வுகளுக்கு பிரபலமான இடமாகக் கருதப்படுகிறது.



எகிப்தின் **al - Hitan** பகுதி ஒரு காலத்தில் தரையில் நடமாடிய விலங்குகள் கடலுக்கு இடம்பெயர்ந்து, திமிங்கலமாக மாறிய வரலாற்றை பறைசாற்றக்கூடிய பல புதைபடிவுகளை (fossil) கொண்டுள்ளது.

# திருட்டு விசிடி

அவுஸ்ரேலியாவின் திருட்டு விசிடிக்கள் உலகில் தற்போது மிகப்பெரிய வெற்றி அடைந்திருக்கிறது. திருட்டு சிடிக்களைப் பயன்படுத்துபவர்கள் இலகுவில் பிடிபடக்கூடியது போல, தற்போது சிடிக்களைக் குறித்த ஒரு நிறுவனம் போலியாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. பல பிரபலமான நிறுவனங்கள் தற்போது போலி சிடிக்களால் நீதிமன்றத்துக்குப் போக இருக்கின்றன.



சொனி கம்பனி கூட இத்தகைய திருட்டு சிடிக்களால் பல சிக்கல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. எம்.பி 3 சிடிக்கள், தான், இத்தகைய சட்டவிரோத சிடிக்களில் அதிகமாகக் காணப்படுகிறது.

தற்போது இணையத்தளத்தில் கூடப் போலி சிடிக்கள் பற்றிய தகவல்கள் வெளியாகிக் கொண்டு வருகின்றன. இது பல இலத்திரனியல் கம்பனிகளுக்குப் பெரும் தலையிடியாக உள்ளன.

# றோபோ கவச வாகன ஓட்டப்போட்டி

கவச வாகனமாகச் செயற்படும் புதியவகை றோபோ ஒன்று அமெரிக்க இராணுவ ஆய்வாளர்களால் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது.




றோபோவால் இயங்கும் இந்தக் கவச வாகனம் (Humvee) சுமார் ஏழு மணி நேரத்துக்கு 322 கிலோ மீற்றர் தொலைவுக்கு தானியங்கி முறையில், விபத்தின்றி ஆய்வின் போது ஓடியது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி இத்தகைய றோபோ கவச வாகனங்களின் ஓட்டப்போட்டி ஒன்று - Mojave பாலைவனத்தில் அமெரிக்க இராணுவ ஆய்வாளர்களால் நடத்தப்படவுள்ளது. அதற்கு முன்னோடியாகவே இந்த கவச வாகனமும் ஒட்டிப்பார்க்கப்பட்டது.

கடந்த ஆண்டும் இத்தகைய ஓர் போட்டி வைக்கப்பட்டபோதும், எந்த றோபோ கவச வாகனமும் வெற்றிகரமாக முடிவுக் கோட்டையை வந்தடையாது இடையில் நின்றுவிட்டன. அத்தகைய தொழில் நுட்பக் கோளாறுகள் தற்போது சீராக்கப்பட்டுள்ளன.

# வெட்டுக்கிளியை திசைதிருப்ப புதிய அணுகுமுறை

விளைநிலங்கள் மீது படையாக வந்து தாக்கும் வெட்டுக்கிளிகளை ஒழிக்கப் புதிய முறை ஒன்றை இஸ்ரேலிய - அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.



இந்த வெட்டுக்கிளிப் பீடைகள் தமது இடப்பெயர்வின்போது கடல்மீதாகப்பறப்பதை தவிர்ப்பதும், கடற்பரப்பிலிருந்து தெறிக்கும் ஒளிக்கற்றைகள் அவற்றின் பரப்பில் இடையூறை ஏற்படுத்துவதும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இத்தகைய வெட்டுக்கிளிகள் வரும் பாதையில் பாரிய நீர்பரப்பிலிருந்து ஒளிக்கற்றைகள் தெறிப்பது போல், செயற்கை முறையில் செய்வதன் மூலம் அவற்றின் பயணப் பாதையை மாற்றமுடியும். இதனால் அவை உணர்வின்றி அழியும் நிலையை ஏற்படுத்தலாம் என ஆய்வாளர்கள் நம்புகின்றனர். பல பூச்சிகள் நீர்ப் பரப்பிலிருந்து தெறிக்கும் ஒளிக்கற்கைகள் தம் கண் மீது படுவதை தவிர்ப்பது வழமையாகும்.

# திரை விமர்சனம்

## சின்னா



வழக்கமான அர்ஜுன் படத்தைப்போன்றே அடிதடி அனைத்தும் நிறைந்துள்ள படம் இது. இதன் இயக்குநர் சுந்தர் சி.

ஆராய்ச்சிக்காக இராமேஸ்வரம் வரும் சிநேகா ரௌடி அர்ஜுனைச் சந்திக்கிறார். முதலில் மோதல். பின்பு காதல். இவரால் திருந்தும் அர்ஜுனை அவருடைய முதலாளி வெறுத்து, சிநேகாவைத் தாக்குகிறார். பின்பு அர்ஜுன் அவரைக் கொலைசெய்துவிட்டு, சிறைக்குப் போகிறார்.

பிறகு சிநேகா அசோக்கைத் திருமணம் செய்துகொள்கிறார். பின்பு அர்ஜுன் சிநேகாவைத் தேடிவருகிறார். ஆனால் சிநேகா அசோக்கைத் தன் கணவனாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

மிகவும் முரட்டுத்தனமாக கணவன் - மனைவியை அர்ஜுன் பிரிக்க நினைக்கிறார். சிநேகாவின் முடிவு தெரிந்தபின், அவர் எடுக்கும் முடிவுதான் மீதிக்கதை.

இயக்குநர் சுந்தர் சி - பல காட்சிகளுக்கு அழுத்தமாக ஒன்றுமே கூறவில்லை. சண்டைப் பயிற்சி இயக்குநர் தளபதி தினேசினால் அற்புதமாகப் படமாக்கப்பட்டிருந்தது. ஆனால் காதல், அடிதடி ஆகியவற்றைத் தனக்கேற்றாற்போல நடித்திருக்கிறார். சிநேகாவுக்கு நடிக்கக்கூடியளவுக்கு ஒரு பாத்திரமும் கொடுக்கப்படவில்லை.

ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியாக வருகிறார் விஜயகுமார். மணிவண்ணனுக்கு ஒன்றுமேயில்லை. பொன்னம்பலமும், மன்சூர் அலிகானும் அர்ஜுனுக்கு உதவியாக வருகிறார்கள்.

ஆனால் சுலக்சனா, வினுச்சக்கரவத்தி, லிவிங்ஸ்டன், ராஜேஷ், ஆர்த்தி என பல நடிகர்கள் நடித்துள்ளார்கள்.

ஒளிப்பதிவு - பிரசாத், இசை டி - இமான் ஆகியோர் ஓரளவுக்கு தங்கள் பணியைச் செய்திருக்கிறார்கள்.

'சின்னா' சொல்லும்படியாக வேறு ஏதும் இல்லை.

- தருணி -

# பனிச்சிறுத்தை சுட்டுக்கொலை

கடந்த இருவாரங்களில் ஆறு பெண்களைக் கொன்றதாகக் கூறப்படும் அரிதான பனிச்சிறுத்தை ஒன்றை, வடக்கு பாகிஸ்தானில் பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.



வயதான இந்தப் புலி - பொறியாக வைக்கப்பட்ட ஆடு ஒன்றைப் பிடிக்க வந்த போது சுட்டுக்கொல்லப் பட்டது. இந்தப் புலி காடுகளில் விறகு பொறுக்கச் சென்ற ஆறு பெண்களைக் கொன்றதாகப் பாகிஸ்தானிய பொலிஸார் கூறுகின்றனர்.

கடைசியாக பெண் ஒருவரைக் கொன்ற அதே இடத்துக்கு இந்தப் புலி வந்த போதே சுடப்பட்டது. பனிச்சிறுத்தை பாதுகாக்கப்பட்ட விலங்காகப் பாகிஸ்தான் அரசால் அறிவிக்கப்பட்டதாயினும், அதைக் கொல்ல அல்லது பிடிக்க பொலிஸாருக்கு அனுமதியுண்டு.

# சிறுநீரக மாற்றுச் சிகிச்சை



தற்போது உறுப்புகளை மாற்றுகின்ற சிகிச்சை முறையில் சிறுநீரகங்கள், மற்றும் ஈரல்கள் யாவும் மிகவும் துல்லியமான முறையில் ஆராய்ந்த பிறகே பொருத்தப்படுகின்றன. ஆனாலும் கார்ட்டிவ் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்களுடைய ஆய்வுகளின்படி, இவற்றைத் தானமாகக் கொடுப்பவர்களுடைய உடல் நிலைமை சற்றுக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. சிலருடைய சிறுநீரகங்கள் மிகவும் ஆரோக்கியமானதாக உள்ளன. ஆனால், அவை மற்றவர்களுக்குப் பொருத்த முடியாதவையாக உள்ளன. ஆனாலும் 93வீதமான சிறுநீரக மாற்றுச் சிகிச்சை முறைகள் வெற்றிதரக் கூடியனவாகவே உள்ளன. இதேவேளை ஒரு சிறுநீரகத்தைத் தானமாகக் கொடுக்க இருப்பவர்களுடைய உடல்.- ஏறக்குறைய 10 அல்லது 12 நாட்களுக்கு மிகுந்த சிரத்தையுடன் சோதிக்கப்படவேண்டியுள்ளது.

# பேரெழுச்சிப் பிரகடன மாநாடு குறித்து வவுனியாவில் ஆலோசனைக் கூட்டம்!

வவுனியா

தமிழ்த் தேசிய வரலாற்றின் திருப்புமுனையாகக் கருதப்படும் வவுனியா பிரகடன மாநாடு குறித்து ஆலோசனைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை புகையிரத நிலைய வீதியிலுள்ள முத்தையா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் ச.குலதேவராசா, மாவட்டத் தலைவர் கே.ஏ.செந்தில்நாதன், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்.என்.ஜி.நாதன், ஏற்பாட்டுக் குழுத்தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞா.அலை, தேசிய எழுச்சிப் பேரவைகளின் பொறுப்பாளர் உமைநேசன் உட்பட, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் பேராளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். 14 முக்கிய தீர்மானங்கள் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு, இறுதியில் தமிழ்த் தேசிய பேரெழுச்சி பிரகடனம் வெளியிடப்படவுள்ளது. இதை சர்வதேச சமூகத்துக்கும், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

23 ஆண்டுகளுக்கு முன்னர் வெலிக்கடைச் சிறையில் 53 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட துயர நாளான ஜூலை 27இல் தமிழர் விடுதலையை உரத்து முழக்கமிட்டுச் சொல்லுவதாக இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

# அரச காணிகளின் ஆக்கிரமிப்பு அமைதியைக் குலைக்கும் செயலே

## மன்னார் அரச அதிபர் வே.விஸ்வலிங்கம்

மன்னார்

மன்னார் மாவட்டத்தில் அரச காணிகளைச் சட்ட விரோதமாக ஆக்கிரமித்து, அமைதியைக் குலைக்கும் நடவடிக்கையில் சிலர் ஈடுபடுவது கவலை தருவதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடியை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சகல சமூகத்தவருக்கும் நன்மை பயக்கும் வகையில், அரச காணிகளை ஒதுக்கீடு செய்து, நல்ல திட்டங்களை அமுல் படுத்த முனையும் வேளையில், ஒரு சிலர் சுயநல நோக்கில் தனிப்பட்ட நலனைக் கருத்தில் கொண்டு, இரவோடு இரவாக செயற்படுவதைக் காண்கிறோம்.

இந்த நடவடிக்கைக்குச் சட்ட ரீதியான தீர்வைப் பெற முடியும். ஆனால் இவ்வாறு செய்ய முனைந்தால், மாவட்டத்தில் இன மோதல்கள் உருவாகி, மாவட்டத்தின் அமைதியைச் சீர்குலைக்கும்.

அரச காணிகளை சட்ட விரோதமாக மத செயற்பாட்டுக்குப் பயன்படுத்தினால் அது பெரும் விளைவை ஏற்படுத்தும் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

அரச அதிகாரிகள் காலத்துக்குக் காலம் இடம் மாறிச் சென்று விடுவார்கள். ஆனால் இங்கு நிரந்தரமாக இருப்பது மக்கள் தான், இவ்வாறான விடயங்களில் விழிப்பாய் இருந்து, குறுகிய நோக்கங்களுக்காக அபிவிருத்திப் பணிகள் சீர்குலைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

இவ்வாறான விடயங்களில் பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## உயர்பாதுகாப்பு வலயத்தில் கைது செய்யப்பட்ட நால்வர் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி

வவுனியா

இரணை இலுப்பைக்குளம் - கல்மடு பாதுகாப்பு முன்னணி காவலரண் பகுதியிலுள்ள, இராணுவ முட்கம்பி தடைகளைத் தாண்டி, உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் பிரவேசித்ததாக, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நான்கு பேரை பிணையில் செல்வதற்கு வவுனியா மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் - காணாமல்போன தங்களுடைய மாடுகளைத் தேடி வந்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இராணுவத்தினரால் போடப்பட்டிருந்த முட்கம்பிகளை வெட்டிக் கொண்டு இவர்கள் நுழைந்தபோதே, கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அஞ்சனா முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நிகழ்வு

வட்டக்கச்சி

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அஞ்சனா முன்பள்ளி சிறார்களின் திறனாய்வுப் போட்டி - அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை ப.கலியுகவரதன் ஏற்றி வைத்தார். தேசியக்கொடியை மாவீரர் அஞ்சனாவின் சகோதரி ஏற்றிவைத்தார். மாவீரர் அஞ்சனாவின் திருவுருவப்படத்துக்கான மலர்மாலையை அவரது சகோதரி அணிவித்தார். அமரர் மகேந்திரவதனனின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை ஏற்றி, மலர் மாலையை சகோதரன் அணிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் யோ.நிலா ஏற்றி வைத்தார். கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக்கழகக் கொடியை திட்ட இணைப்பாளர் தயாளன் ஏற்றிவைத்தார். முன்பள்ளி மேம்பாட்டுக் கொடியை முன்பள்ளி இணைப்பாளர் ஜெ. கௌசலா ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன செயலாளர் குமாரசாமி நிகழ்த்தினார். கருத்துரையை மாயவனூர் கிராமசேவையாளர் ரூபசிங்கம் நிகழ்த்தினார். சிறப்புரையை தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் யோ.நிலா, ப.கலியுகவரதன், கிளிநொச்சி புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் மு.குமாரசாமி ஆகியோர் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (9)

## மாவீரர் 2 ஆம் லெப்டினன்ட் ஈழராசனின் 'விழுதொன்றின் குரல் அல்லது மனிதம் புரிதல்' நூல் வெளியீட்டுவிழா கிளிநொச்சியில் நாளை!

கிளிநொச்சி

மாவீரர் 2 ஆம் லெப்டினன்ட் ஈழராசனின் (நிதிவன்) விழுதொன்றின் குரல் அல்லது மனிதம் புரிதல் எனும் நூலின் வெளியீட்டுவிழா-நாளை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில், தூயவன் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை புலிகளின் குரல் வானொலி அறிவிப்பாளர் நேகிலன் நிகழ்த்தவுள்ளார். வாழ்த்துரையை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் மதிப்பீட்டுரையை அரசியல் இலக்கிய விமர்சகர் நிலாந்தன், எழுத்தாளர் பு.சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக துணைப்பணிப்பாளர் நீகன் நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

## ஜே.ஆர்.எஸ்.நிறுவனத்தால் உபகரணங்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சலவைத் தொழிலாளர்களுக்கு, ஜே.ஆர்.எஸ் நிறுவனத்தால் கடந்த வெள்ளிக்கிழமை சிலாவத்தை அன்னம்மாள் ஆலயத்தில் வைத்து உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு ஜே.ஆர்.எஸ் நிறுவன இணைப்பாளர் அலலன் தலைமையில் நடைபெற்றது. சலவைத் தொழிலாளருக்கான உபகரணங்களை முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளார் வழங்கினார். சுனாமியால் அழிவுற்ற சில பொருட்களை வழங்கினார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூலை-26

1882: போரில் காயப்பட்டவர்களை நடத்த வேண்டிய வழிமுறைகளைப்பற்றிய ஜெனீவா தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதாக அமெரிக்கா அறிவித்தது.

1908 அமெரிக்காவில் உள்நாட்டுப் பாதுகாப்பைக் கவனிக்க, சமஸ்டி புலனாய்வு பிரிவு (FBI) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

1917 போர்க் கைதிகள் குறித்து ஜேர்மனி - பிரான்ஸ் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

* ரஷ்யப் போர்ப் படகுகள் கருங்கடலின் துருக்கி கரையோரப் பகுதிகளில் ஜேர்மனி எதிர்ப்புப் பிரசார அறிக்கைகளை ஆயிரக்கணக்கான போத்தல்களில் அடைத்து கடலில் மிதக்கவிட்டன.

1919 பிரித்தானிய - ஆப்கான் சமாதான மாநாடு ராவல் பிண்டியில் ஆரம்பமாகியது.

1941 அமெரிக்காவிலும், பிரிட்டனிலுமிருந்த ஜப்பான் நாட்டின் சொத்துகள் முடக்கப்பட்டன.

1945 பார்ட்ஸ்டாம் பிரகடனம் எனக் குறிப்பிடப்படும் - ஜப்பானை நிபந்தனை எதுவுமின்றி சரணடையுமாறு கூறும் இறுதி எச்சரிக்கையை அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து விடுத்தன. இருந்தும் இந்தப் பிரகடனத்தை ஏற்க ஜப்பான் மறுத்துவிட்டது.

1948 இராணுவத்திலும், அரசுப் பணியிலும் இன வேறு பாடு காட்டப்படுவதற்கு அமெரிக்க அதிபர் தடைவிதித்து ஆணை பிறப்பித்தார்.

1953 கியூபாவில் பார்ட்டிஸ்டா அரசை எதிர்த்து, சாண்டியாகோ என்ற இடத்தில் இருந்த இராணுவத்தளத்தின் மீது பிடல் காஸ்ரோவினது புரட்சிப்படைகள் தாக்குதலை நடத்தின. அரசுப் படைகள் இந்தத்தாக்குதலை முறியடித்து காஸ்ரோவைக் கைதுசெய்து சிறையில் அடைத்தது.

1956 அஸ்வான் அணைகட்ட பிரிட்டனும் அமெரிக்காவும் உதவ மறுத்ததன் காரணமாக, எகிப்து அதிபர் கமால் அப்துல் நாஸர் - சுயஸ் கால்வாயை நாட்டுடமையாக்கி அறிவித்தார்.

* அண்றியோ டோறியா எனப்பட்ட 29083 தொன் எடையுள்ள இத்தாலியக் கப்பல் ஸ்டொக்ஹோம் எனும் 11644 தொன் எடையுள்ள சுவீடிஸ் கப்பலுடன் மோதி, இரண்டும் மூழ்கின. பலர் பலியாகினர்.

1957 இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக சிங்களப் பேரினவாதிகளால் கிழித்தெறியப்பட்ட மூன்றாவது ஒப்பந்தமான பண்டா - செல்வா ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

1963 யூகோஸ்லாவியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் ஸ்கோப்ஜி என்ற நகர் முற்றாக தரைமட்டமாகியது. இதில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர்.

1971 அமெரிக்கா அப்பலோ - 15 என்ற விண்கலத்தைச் செலுத்தியது. இதில் சென்ற டேவிட் ஸ்காட், ஜேம்ஸ் இர்வின் என்ற இருவரும் போல்கன் என்ற நிலாக்கலம் மூலமாக சந்திரனில் இறங்கி, 67 மணி நேரம் தங்கியிருந்தனர்.

1994 ஜோர்தான் மன்னர் ஹீஸ்ஸேனும், இஸ்ரேல் பிரதமர் ஜிட்வுர்க் ர்ாபினும் தங்கள் இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள பகைமையை மறந்து, நட்புறவு கொள்ள ஒத்துக் கொண்டனர்.

* தமிழர்களுக்கு கூடுதல் தன்னாட்சி அதிகாரம் வழங்க முடியாது என, ஐ.தே.கட்சி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது.

1996 கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்குடன், இராணுவத்தினர் சத்ஜெய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

2000 வடபகுதிக்கான பயணிகள் கப்பல் சேவைக்கு, செஞ்சிலுவை சர்வதேசக்குழு வழித்துணை வழங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

* லைபீரியா சுதந்திர தினம்

* உலக வறுமை ஒழிப்பு தினம்

தொகுப்பு - சந்துரு

# புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலை மாடிக்கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது

புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில், புதிய மாடிக்கட்டத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்புப் பங்குத்தந்தை, அளம்பில் பங்குத்தந்தை, முல்லைத்தீவு உதவிப்பங்குத் தந்தை, அருட்பணியாளர் றொபின்சன் அடிகளார், புதுக்குடியிருப்பு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் பிறையாளன், புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம அலுவலர் சிவராசா, புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் கனக சுந்தர சுவாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசியக்கொடி ஏற்றப்பட்டு, இறை ஆசியுடன் பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோரால் அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்தப் புதிய மாடிக்கட்டடம், பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கு அண்மையில் அமைக்கப்படவுள்ளது.

1985ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு மக்களால் இந்தப் பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கான காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டதை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் இந்த மாடிக்கட்டடத்தை அமைப்பதற்குப் பூரண விருப்பத்தைத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
*சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற*
*குலம்பற்றி வாழ்தும்என் பார்*
*-திருக்குறள்*

# நமது நோக்கு

## நேரடி வெளிநாட்டு உதவிகள்

சுனாமி நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பை, பல்வேறு இழுபறிகளின் மத்தியில் உருவாக்கிய சில நாட்களிலேயே - அதன் செயற்பாடு உயர்நீதிமன்றத்தால் முடக்கப்பட்டுவிட்டது.

சுனாமி ஏற்பட்டு ஏழு மாதங்கள் இன்றோடு பூர்த்தியாகின்றபோதும், பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு நிவாரண புனர்வாழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், இன்னமும் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணப் பொருட்களை நம்பியவர்களாக - அகதி முகாம்களிலும், தற்காலிக குடியிருப்புக்களிலும் காலம்கழிக்க வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இதையிட்டு அரசாங்கம் எந்தக் கவலையும் கொள்வதாகத் தெரியவில்லை. மன ஒப்புதல் இல்லாமல் - சர்வதேச சமூகத்தின் நிர்ப்பந்தத்துக்காக உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு முடக்கப்பட்டதால் அதிக குதூகலம் கொண்டது அரசாங்கம்தான்.

இப்படி சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கென அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நிர்வாகச் செயற்பாடுகளைக்கூட முன்னெடுக்க விடாமல் தடைகளைப் போட்டுவருகிறது.

ஒரு புறத்தில் சிங்கள் அரசு தமிழ் மக்களை நிர்வாக ரீதியாக முடக்கிவிடும் நிலையில், இன்னொரு புறத்தில் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளில் இனவாதக் கூச்சல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட சூழலில் சர்வதேச சமூகம் என்ன செய்யப் போகிறது?

பாதிக்கப்பட்ட மக்களுக்காக கோடி கோடியாகக் கொட்டித் தருகிறோம் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துங்கள் என்று வலியுறுத்திய சர்வதேசம் - பொதுக்கட்டமைப்பையும், நீதித்துறையைக் கொண்டு சிங்கள தேசம் முடக்கிவிட்ட பின்னர் என்ன முடிவு எடுக்கப்போகின்றது?

தமிழ்மக்கள் மீதான சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்புக்களும் அடக்குமுறைககளும் எந்தெந்த வடிவங்களில் எல்லாம் தொடர்கின்றன என்பதை உணர்ந்த பின்னரும் - சர்வதேசம் மௌனம் காப்பது எவ்விதத்திலும் சரியானதல்ல.

நோர்வே அனுசரணையாளர்கள் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தபோது இந்த விடயமே பிரதான அம்சமாகப் பேசப்பட்டிருந்தது.

அவலங்களைச் சந்தித்த மக்களுக்காக சர்வதேசம் என்ன செய்யப்போகிறது? சமாதான முயற்சிகள் என்ற பெயரில் - இழுபறிகள் நிறைந்த பேச்சுக்களை முன்னெடுப்பதால் மக்களின் உடனடிப்பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்போது என்பது பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சர்வதேச சமூகம் உதவி செய்வதற்கு இப்போதுள்ள ஒரே வழி, தமிழர் தாயகத்துக்கான நேரடி உதவிகளை வழங்குவதாகவே இருக்கமுடியும்.

இதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் விரைவாகச் சென்றடைவதற்கு உதவும். அரச தரப்பினரின் முட்டுக்கட்டைகளைத் தாண்டி தமிழ்மக்களுக்கு சர்வதேச சமூகம் உதவி வழங்குவதற்கான கடப்பாட்டைக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் - வெறும் கண்டனங்களையோ, அறிக்கைகளையோ சர்வதேச சமூகம் வெளியிட்டுக் கொண்டிருப்பதால் எந்த வகையிலும் சிங்கள தேசம் தன்னிலையில் இருந்து மாறப்போவதில்லை.

தமிழர் தாயகப் பகுதிகளை எப்படியெல்லாம் சிதைக்கலாம் எனக் கனவுகண்டுகொண்டிருக்கும் சிங்கள தேசம் ஒருபோதுமே மீளமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை எடுக்காது.

எனவே ஒன்றுபட்ட குரலாக தமிழ்மக்கள் சர்வதேசத்தை நோக்கிக் குரலெழுப்பவேண்டிய காலம் கனிந்துள் ளது. ஏனென்றால், சிங்கள அரசூமூலம் எந்தத் தீர்வையும் தமிழ்மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாது என்ற உண்மையை சர்வதேசம் உணர ஆரம்பித்திருக்கின்ற சூழல் இது.

இப்போது தமிழ் தேசிய இனத்தின் உரிமைக் குரல் - சர்வதேசத்தை நோக்கி ஓங்கி ஒலிக்கப்பட்டால் அதுவே ஒரு மாற்றத்துக்கான திறவுகோலாக அமையும்.

வவுனியாவில் நாளை வெளியிடவுள்ள எழுச்சிப் பிரகடனம் - சர்வதேசத்தின் மனச்சாட்சிக் கதவுகளைத் தட்டுவதற்கு மட்டுமன்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கான நேரடி உதவிகளைப் பெற்றுக்கொடுக்கவும் உதவியாக அமையும் என நம்புவோமாக.

## நாடும் நடப்பும்




# தமிழினம் தன்னாட்சி பெறவேண்டுமென தாகம் கொண்டிருந்தவர் கந்த முருகேசனார்

### பண்டிதர் வீ.பரந்தாமன்

"தமிழினம் தன்னாட்சி பெற வேண்டும் எனப் பெருந்தாகம் கொண்டிருந்தவர் தென்புலோலியூர் தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனார். அவரது தமிழ்த்தாகம் முன்னெடுத்துச் செல்லப்பட்டு, வெற்றிபெற உழைக்க வேண்டியது தமிழினத்தின் இன்றைய கடமையாகும். தமிழ்த் தாத்தாவின் தமிழ்ப் பணிகளைத் தமிழ் உலகம் மறந்து விட மாட்டாது" என பண்டிதர் வீ.பரந்தாமன் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற தென் புலோலியூர் தமிழ்த்தாத்தா கந்த முருகேசனாரின் 40ஆவது நினைவு தின விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேசசபை பிரதமநூலகர் எஸ்.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பண்டிதர் வீ.பரந்தாமன் தொடர்ந்து பேசுகையில் -

தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனாரின் தமிழ்ப்பணிகள் - நமது எதிர்காலச் சந்ததியினர் மத்தியிலே கொண்டு செல்லப்பட வேண்டும். அப்போது எழுச்சிமிக்கதோர் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

கந்தமுருகேசனாரிடம் தமிழ் கற்கக் கிடைத்தமையை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். தமிழ் மொழிக்கும், பண்பாட்டுக்கும் அவர் மெருகூட்டி, அவற்றை வளர்த்தார். தமிழை வளர்ப்பதற்கு அவர் தமிழ் நாட்டுடனும் தொடர்பு வைத்திருந்தார்.

இவரின் ஞாபகார்த்தமாக மணி மண்டபமும், நூல் நிலையமும் அமைக்கப்படவேண்டும். இந்த முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பவர்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

தென்புலோலி, புற்றளை மகா வித்தியாலயத்திலே சில காலம் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் - உடல் நிலை காரணமாகத் தனது இல்லத்திலேயே திண்ணைப் பள்ளியை நடத்தி, தமிழை வளர்த்து வந்தார். சிறுவர் முதல் முதியவர் வரை கல்வி கற்பித்து, புலவர் ஒலி வீசிய புலோலிக்கு மெருகூட்டினார். உலகின் பல பாகங்களிலும் இவரிடம் கல்வி கற்ற பலர், உயர் பதவிகளோடு நல்வாழ்வு வாழ்கின்றனர். ஆண்டுதோறும் கந்தமுருகேசனாரின் ஞாபகார்த்த விழாவை நடத்தி, கந்தமுருகேசனாரின் தமிழ் பணியின் எழுச்சியை உலகறியச் செய்து வருவது மிகச்சிறப்பாகும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறைப் பிரதேசசபை செயலாளர் எஸ். பசுபதி உரையாற்றுகையில் -

புலோலிக்குக் கீர்த்தியையும், புகழையும், மகிமையையும் ஏற்படுத்தியவர்களில் மிக முக்கியமானவர் தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார். தமிழ் உலகில் அவருக்கு நிகரானவர் எவருமில்லை என்றே கூறலாம். அவர் விட்டுச் சென்ற தமிழ்ப் பணியை நாம் தொடரவேண்டும்.

கந்தமுருகேசனார் கையெழுத்துப் பிரதியாக விட்டுச்சென்ற "நல்லை நாவலன் கோவை" நூல் அச்சேற்றப்பட்டு வெளியிடப் பட்டிருப்பதும், யாழ்.பல்கலைக் கழகத்தில் கந்தமுருகேசனார் புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பிக் கப் பட்டிருப்பதும் மிக மிக மகிழ்ச்சிக் குரியதாகும். இந்தத் தமிழ்ப் பணிகளை முன்னின்று ஆற்றுபவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள் எனத் தெரிவித்தார்.

# சுனாமி நிவாரண நிதிமோசடி தொடர்பாக பிரதமர் மீதான விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு—

சுனாமி நிவாரணப் பணிகளுக்காகக் கிடைத்த பல கோடி ரூபாவை ஹெல்பிங் அம்பாந்தோட்டை என்ற தனது வங்கிக் கணக்கில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வைப்பிலிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து விசாரணைக்கு, கடந்த செவ்வாய்க்கிழமை சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் அனுமதி வழங்கியதையடுத்து, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைக்காகக் கடந்த வெள்ளிக்கிழமை அலரி மாளிகைக்குச் சென்ற சி.ஐ.டியினர் ஹெல்பிங் அம்பாந்தோட்டை தொடர்பான ஆவணங்கள் பலவற்றை நீண்ட நேரம் ஆராய்ந்து, தம்முடன் எடுத்துச் சென்றார்.

நிவாரண நிதிக்காக வழங்கப்பட்ட 82 மில்லியன் ரூபாவை, ஹெல்பிங் அம்பாந்தோட்டை என்ற பெயரில் மகிந்த ராஜபக்ஷ - ராஜகிரியவிலுள்ள ஸ்டாண்டட் சாட்டற் வங்கியில் வைப்பலிட்டுள்ளதாகக் கடந்த திங்கட்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியினர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிதியை உதவி வழங்கும் நாடுகளே ஹெல்பிங் அம்பாந்தோட்டை நிதியத்துக்காகத் தந்ததாகவும், இந்த நிதியை இந்த நிதியத்துக்கு மாற்ற அமைச்சரவை அனுமதி வழங்கியதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இந்த முறைப்பாட்டில் பிரதமரின் செயலாளர் லலித் வீரதுங்கவின் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்ததால், கடந்த வெள்ளிக்கிழமை செயலாளரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அத்துடன் பிரதமரின் அலுவலகக் கணக்காளரினதும் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரிடமும் அடுத்த ஓரிருதினங்களில் வாக்குமூலம் பெறப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# கண்ணாடி இழைப் படகுகள் நெடுந்தீவில் வைத்து புனரமைப்பு

நெடுந்தீவு—

நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட கண்ணாடி இழைப் படகுகளில் சுமார் 36 படகுகள் இதுவரைக்கும் நோராட் நிறுவன உதவியுடன் நெடுந்தீவில் வைத்தே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

சுமார் 150இற்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்துள்ள நிலையில், நோராட் நிறுவன உதவியுடன் நெடுந்தீவில் அமைக்கப்பட்டுள்ள படகு, புனரமைப்புத் தளத்தில் வைத்தே படகுகள் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை, இவ்வாறு திருத்தம் செய்யப்படும் படகுகள் ஒவ்வொன்றும் சுமார் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், தொடர்ந்தும் ஏனைய படகுகளுக்கான வேலைகள் இடம்பெற்று வருவதாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட படகுகள் திருத்தும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

நோராட் நிறுவன உதவியுடன் இந்தப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையிட்டு, நெடுந்தீவு பிரதேச பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் பெருநன்மையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

கல்வியியல்...

கா.நிமலன்

# கல்வியும் உலக மயமாதலும்

# Education And GlobaliZation



உலக அரங்கில் இன்று பிரபல்யமாகப் பேசப்பட்டுவரும் விடயங்களில் உலகமயமாக்கலும் ஒன்றாகும். உலக நடப்புகளைப் பற்றி ஆர்வலர்கள் அறியத் துடித்துக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் - உலக மயமாக்கல், கல்வித்துறையில் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி அறிந்திருக்க வேண்டியதும் அவசியமானதாகும். அந்தவகையில் உலக மயமாக்கலினால் கல்வித்துறையில் ஏற்படும் மாறுதல்கள் இந்தக் கட்டுரையில் நோக்கப்படுகிறது.

உலகமயமாக்கல் என்பதை உலகில் காணப்படும் நாடுகளையும், அந்த நாடுகளில் காணப்படும் அனைத்து மக்களையும் பொருளாதார, அரசியல், தொழில் நுட்ப, சமூக, கலாசார பரிணாமங்களினூடாக உலகமானது ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட தன்மைக்குள் அல்லது அமைப்புக்குள் கொண்டுவருதல் உலகமயமாக்கல் எனக்கூறலாம். சுருக்கமாகக் கூறினால் உலகின் தேசங்களையும், அவற்றில் வாழும் பிரஜைகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயற்தொடர்முறையே இதுவாகும்.

உலகமயமாக்கலானது - இன்றைய காலகட்டத்தில் பல்வேறு துறைகளில் செல்வாக்குச் செலுத்தினாலும் கல்வித்துறையில் ஏற்படுத்தும் செல்வாக்குகள் பின்வரும் தலைப்புகளின் அடிப்படையில் இந்தக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.

1. உலகமயமாக்கலால் கல்வியில் ஏற்படும் மாற்றம்.

2. உலகமயமாக்கலும், இலங்கையின் கல்வியும்.

3. உலகமயமாக்கலால் கல்வித் துறைக்கு ஏற்படும் நன்மைகள்.

4. உலகமயமாக்கலால் கல்வித் துறைக்கு ஏற்படும் பாதிப்புகள்.

## உலகமயமாதலினால் கல்வியில் ஏற்படும் மாற்றம்

உலகமயமாக்கலின் செல்வாக்கினால் பல்வேறு மாற்றங்கள் கல்வித்துறையில் காலத்துக்குக்காலம் கொண்டுவரப்படுகிறது. ஒரு காலத்தில் அரசதுறைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட கல்வி, இன்று தனியாரால் வழங்கப்பட்டுக்கொண்டிருப்பதனை நாம் அவதானிக்கலாம். இதனால் கல்வி இன்று பொருளாதார பண்டமாக மாற்றம் பெறுகிறது. ஒருவர் தன்னிடம் உள்ள பணத்தின் அளவுக்கேற்ப கல்வியைப் பெறும் நிலை இன்றைய சமூகத்தில் காணப்படுகிறது.

சர்வதேச ரீதியாக தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் தமது கல்விசார் முதலீடுகளை உலகநாடுகளில் நிறுவ முற்படுகின்றன. கல்வியை இலாபகரமான முதலீடு செய்யும் துறையாகக் கருதிச் செயற்பட்டு வருகின்றனர். இதனால் கல்வியில் தரரீதியான வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கல்விசார் மனிதவள நகர்வும் இன்று உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருவதை நாம் அவதானிக்கலாம். விரிவுரையாளர்கள், கல்வியியலாளர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர் என பலதரப்பட்டோர் உலக நாடுகளுக்கு புலமைப் பரிசில் பெற்று விசேட கொடுப்பனவுகளுடன் செயற் திட்டங்கள், ஆய்வுகளை மேற்கொண்டு வருவதையும் இங்குகுறிப்பிடமுடியும்.

சர்வதேச ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் நவீன கற்றல் - கற்பித்தல் முறைகள் வளரும் நாடுகளில் பின்பற்றப்படுகிறது. மின்னியல் சாதனங்கள், மின்னியல் நூல்களின் பாவனை இன்று எல்லா நாடுகளிலுமே அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் கல்வியின் தரம் மேலும் உயர்ந்துகொண்டு வருகிறது. உலக நாடுகளிடையே சமாந்தரமாக நடைபோடக்கூடிய பட்டங்கள், டிப்ளோமாக்கள் இன்று உலகமயமாக்கலால் எமக்குக் கிடைத்தவையேயாகும்.

ஒருவருடைய கல்வித்தகுதிகள் அங்கீகரிக்கப்படல், முன்பு அரச கல்வி நிறுவனங்களுக்கும், அரச பல்கலைக்கழகங்களுக்கும் உரித்தானதாக இருந்தது. ஆனால் இன்று உலகமயமாதலில் தர உறுதிப்பாடு என்ற எண்ணக் கருவின் அடிப்படையில் தனியார் கம்பனிகளால் வழங்கப்படும் பட்டங்களும் உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் பெறுகிறது. இன்று கல்வியானது வணிக மயப்படுத்தப்பட்டு வருகிறது எனலாம். பதிப்புரிமை, வர்த்தக குறியீடு, முகவர், இலாபம் போன்ற இடைநிலை அம்சங்கள் கல்வித் தொழிலில் வளர்ந்துள்ளன. இந்தக் கல்விப் பண்டத்தை வாங்கு வதற்கான கடன் வசதிகளும் வணிக வங்கிகளால் வழங்கப்பட்டு வருகின்றமை இங்கு சிறப் பாகக் குறிப்பிடமுடியும். இவ் வாறாக உலகமயமாக்கலால் ஏனைய துறைகளைப் போல கல்வியும் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுவருகிறது.

## உலகமயமாக்கலும் இலங்கையின் கல்வியும்

இலங்கையில் இன்று வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும் கல்வியானது - உலகநாடுகளது கல்விக்கொள்கைகள், கலைத்திட்டம், பாடத்திட்டத்தைத் தழுவி அமைக்கப்பட்டு வந்திருப்பதை

**தனியாரால் இன்று வழங்கப் பட்டுக்கொண்டிருக்கும் கல்வி முகாமைத்துவமானது ஒழுங்கானதாகவும், சீரானதாகவும் வழங்க வாய்ப்பு ஏற்படுகிறது. நவீன தொழில்நுட்பசாதனங்களின் பயன்பாட்டினால் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மிகவும் நுட்பமாகவும், நிறைவான பயனைப் பெறும் நோக்கிலும் அமைந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.**

இங்கு குறிப்பிடலாம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சி செய்தபோது, ஆங்கிலமொழி சிறப்புப்பெற்ற மொழியாகக் காணப்பட்டது. உலகமயமாக்கலின் பின்பு மீண்டும் இந்த மொழி ஊடக மொழியாக தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டாம் மொழியாக ஆங்கில மொழியை வளர்ப்பதற்காக கல்வி அமைச்சின் சிபார்சுப்படி தேசிய கல்வியியற்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என்பன தற்போது உலகமயமாக்கலோடு இணைந்து வளர்ச்சி கண்டு வருகின்றன.

இலங்கையில் 70 இற்கும் மேற்பட்ட சர்வதேச பாடசாலைகள் பிரித்தானியாவின் க.பொ.த. சாதாரணம், க.பொ.த.உயர்தரம் போன்ற வகுப்புகளின் கலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி செயற்பட்டு வருகின்றன. உலக நாடுகளின் கல்வித்தரத்துக்கேற்ப இலங்கையின் கல்வியும் வழங்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.


இலங்கையிலிருக்கும் ஆசிரியர்கள், அதிபர்கள், நிர்வாகிகளுக்கு சர்வதேச ரீதியான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்லாது ஆசிரியர் வள நிலையம் அமைத்தல், தரமான பாடநூலை எழுதுதல், தரமான கதிரை மேசையைப் பயன்படுத்தல், நூலகத்துக்காக விசேடமாக அமைக்கப்பட்ட கணினி மேசைகள் எல்லாம் எமக்கு உலகமயமாக்கலால் கிடைத்தவையேயாகும்.

உலகமயமாக்கலால் தகவல் தொழில்நுட்பப் பாடம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அந்த வகையில் இலங்கையின் கல்வியும் சர்வதேச தரத்தைப் பேணும் வகையில் மாணவர் பயிற்சி, ஆசிரியர் தரத்தை மேம்படுத்தல், திணைக்கள அதிகாரிகளை மேம்படுத்தல் போன்றவற்றுக்காக தொழில்நுட்பத் தகவல் பாடத்தை பாடசாலைகளிலும், ஆசிரியர் பயிற்சி நிலையங்களிலும், கல்வியியற் கல்லூரிகளிலும் அறிமுகப்படுத்தியுள்ளமை உலகமயமாக்கலால் இலங்கைக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களேயாகும். அண்மையில் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட ஒரு தகவலை இங்கு சிறப்பாகக் குறிப் பிடமுடியும்.

2006 ஆம் ஆண்டு முதல் க.பொ.த.சாதாரண தர வகுப்புகளில் தகவல் தொழில்நுட்ப பாடம் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக தீர்மானித்துள்ளது. இவ்வாறாக இலங்கையின் கல்வியும் உலக மயமாக்கலோடு இணைந்து வளர்ச்சிகண்டு வருகின்றது என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

## உலகமயமாக்கலால் கல்வித்துறைக்கு ஏற்படும் நன்மைகள்

தனியாரால் இன்று வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும் கல்வி முகாமைத்துவமானது ஒழுங்கானதாகவும், சீரானதாகவும் வழங்க வாய்ப்பு ஏற்படுகிறது. நவீன தொழில்நுட்பசாதனங்களின் பயன்பாட்டினால் கற்றல்



- கற்பித்தல் செயற்பாடுகள் மிகவும் நுட்பமாகவும், நிறைவான பயனைப் பெறும் நோக்கிலும் அமைந்துகொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

**உலகமயமாக்கல் என்பதை உலகில் காணப்படும் நாடுகளையும், அந்த நாடுகளில் காணப்படும் அனைத்து மக்களையும் பொருளாதார, அரசியல், தொழில்நுட்ப, சமூக, கலாசார பரிணாமங்களினூடாக உலகமானது ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட தன்மைக்குள் அல்லது அமைப்புக்குள் கொண்டுவருதல் உலகமயமாக்கல் எனக்கூறலாம். சுருக்கமாகக் கூறினால் உலகின் தேசங்களையும், அவற்றில் வாழும் பிரஜைகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயற் தொடர் முறையே இதுவாகும்.**

உலக நாடுகளிடையே ஏற்றுக்கொள்ளக்கூடிய கலைத்திட்டம் பின்பற்றப்படுவதால், எல்லா நாடுகளுமே அங்கீகரிக்கும் பட்டத்தைப் பெறமுடிகிறது. இதனால் ஒருவர் கற்ற கல்வியை இன்னொரு நாட்டில் எந்தவித தயக்கமுமின்றிப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டு வருவதை இங்கு குறிப்பிடலாம்.

மாணவரிடையே கிடைக்கும் கல்வி அனுபவங்கள், சாதாரண குடிமகனைக்கூட சர்வதேச புரிந்துணர்வுடையவனாக்கும் நிலைக்கு மாற்றிவருகிறது. பல்வேறு இன, மத, மொழி, கலாசார பிரிவினர் சேர்ந்து கற்பதனால் பன்மைக் கலாசார விருத்தி ஏற்படுகிறது. இதனால் நல்லிணக்கம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, குழுமுறை விருப்பம் போன்ற நல்லொழுக்க பண்புகள் வளர ஊன்றுகோலாக உலகமயமாக்கல் அமைந்துகொள்கிறது எனலாம்.

## உலகமயமாக்கலால் கல்வித் துறைக்கு ஏற்படும் பாதிப்புகள்

எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் நன்மை இருந்தால் தீய விளைவுகள் அல்லது பாதிப்புகள் இருந்தேயாகும் என்பதற்கிணங்க - உலகமயமாக்கலால் எதிர்விளைவுகளும் காணப்படத்தான் செய்கின்றன.

ஒரு நாட்டினது சுதேச விழுமியங்கள், பண்பாடுகள், கலை, கலாசார அம்சங்கள் பின்பற்றப்படாமல் போவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுகின்றன. இதற்கான காரணம் ஒரு நாட்டில் பின்பற்றப்பட்டுவரும் கலாசார, பண்பாட்டு அம்சங்களின் செல்வாக்குகள் இன்னொரு நாட்டின்மீது திணிக்கப்படுவதாகும். இது உலகமயமாக்கலால் கிடைத்த எதிர் விளைவுகளுள் முக்கியமானதாகும்.

அதுமட்டுமல்லாது பாரம்பரியமாக எமது நாட்டில் பின்பற்றப்படும் பல கல்வி நிறுவனங்கள் செயலிழந்து வருகின்றன. உதாரணமாக ஆசிரியர் கலாசாலைகளை இங்கு குறிப்பிடலாம். இவற்றுக்குப் பதிலாக எமது நாட்டில் கல்வியியற் கல்லூரிகள் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களாகத் தமது சேவையை வழங்கிவருகின்றதை அவதானிக்க முடிகிறது.

உலகமயமாக்கலின் தாக்கம் மாணவர்கள் மத்தியில் தீவிர போட்டிகளுக்கு முகம் கொடுக்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதனால் மாணவர் மத்தியில் அமைதியின்மை ஏற்படவும் வாய்ப்பாக அமைந்துகொள்கிறது. ஒரு நாட்டின் தனித்துவத்தை எடுத்துக்கூறும் வரலாறு போன்ற பாடங்கள் கைவிடப்படும் நிலை ஏற்படுவதுடன், பாரம்பரிய விழுமியங்களும், பண்புகளும் சமூகத்தில் அருகிவருகின்றமையைக் காணலாம்.

இவை எல்லாவற்றையும்விட புவிக்கோளம் வெப்பமடைதல், சுற்றுப்புறச்சூழல் பாதிப்படைதல், ஓசோன் படைத்துவாரம் போன்ற சூழல் பிரச்சினைகளையும் பாதிப்புகள் என்ற ரீதியில் இந்தப் பகுதியில் சிறப்பாகக் குறிப்பிடமுடியும்.

இவ்வாறாக உலகமயமாக்கலானது ஆங்கிலத்தை பொது மொழியாக ஏற்றுக்கொண்டு, கல்வித்துறையில் ஏற்படுத்தும் மாற்றங்கள் எண்ணிடற்கரியது. நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் உலகமயமாதலை தனியே கல்வித்துறையோடு மட்டும் நோக்கிப் பார்ப்பதோடு நின்றுவிடாது, ஏனைய துறைகளோடும் தொடர்புபடுத்திச் சிந்திக்க வேண்டும்.

# தீவிரவாதிகளின் தாக்குதல்களால் எகிப்து பணிந்துபோகமாட்டாது!

## ஜனாதிபதி ஹொஸ்னிமுபாரக்



கெய்ரோ —

எகிப்தில் நடத்தப்பட்ட தாக்குதலைப் பார்த்துப் பயந்து, தீவிரவாதிகளுக்கு பணிந்து விடமாட்டோம் என்று அந்த நாட்டு அதிபர் ஹொஸ்னி முபாரக் தெரிவித்துள்ளார்.

எகிப்து நாட்டில் சுற்றுலா நகரமான ஷாம் அல்ஷேக் என்ற இடத்தில் தீவிரவாதிகள் நடத்திய தொடர் குண்டு வெடிப்பில் சுற்றுலாப் பயணிகள் உட்பட 90 பேர் பலியா



னதுடன், 200 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இறந்து போனவர்களில் பெரும்பாலானவர்கள் எகிப்தியர்கள். இத்தாலி மற்றும் செக்.குடியரசு நாட்டைச் சேர்ந்தவர்கள் உட்பட 7 பேர் மட்டுமே எகிப்தியர் அல்லாதவர்கள்.

காயம் அடைந்தவர்களில் 9 பேர் இத்தாலியர்கள், 5 பேர் சவுதி அரேபியர்கள், 3 பேர் பிரிட்டிஷார், ஒருவர் ரஷியர், ஒருவர் உக்ரேனியர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஷாம் அல்ஷேக் பகுதியில் இருந்து 35 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். இந்தச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட எகிப்து அதிபர் ஹொஸ்னி முபாரக் தன் விடுமுறையை ரத்து செய்துவிட்டு ஷாம் அல்ஷேக் நகருக்குச் சென்றார்.

இதன் பின் அவர் தொலைக்காட்சியில் தோன்றிப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது :-

இந்தப் பயங்கரவாதச் சம்பவத்தைக் கண்டு பயந்து போய், தீவிரவாதிகளுக்குப் பணிந்துவிட மாட்டோம். தீவிரவாதத்தை வேரறுக்க வேண்டும் என்ற எங்கள் உறுதியை இதுமேலும் வலுப்படுத்தியுள்ளது.

தீவிரவாதிகளின் இந்த மிரட்டலுக்கு அடிபணியவோ அல்லது அவர்களுடன் சமரசம் செய்து கொள்ளவோ மாட்டோம் எனத் தெரிவித்தார்.

இந்தக் குண்டு வெடிப்பிற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்தச் சம்பவம் காட்டு மிராண்டித்தனமானது என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் கண்டித்தார்.

அவர் முபாரக்குடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அதேபோல் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனும் தொடர்புகொண்டு பேசி, தன் வருத்தத்தைத் தெரிவித்தார். இந்தப் பயங்கரவாதச் செயலுக்கு அமெரிக்கா மீது ஈரான் பழி போட்டது. தீவிரவாதத்தை ஒழிக்க, தவறான அணுகுமுறையைக் கையாண்டதன் மூலம் உலகத்தையே பாதுகாப்பில்லாததாக அமெரிக்கா மாற்றி விட்டது என்று ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.



இதே வேளை, இந்தக் குண்டுத் தாக்குதலைத் தொடாந்து ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகள் எகிப்து நாட்டுப் பயணத்தை ரத்துச் செய்தனர். இதேவேளை, எகிப்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாக ஆறு பாகிஸ்தான் பிரஜைகளை எகிப்திய பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த அறுவரதும் புகைப்படங்களை வெளியிட்ட எகிப்திய பொலிஸார், தற்கொலைத் தாக்குதல் நடைபெற்ற வேளை, இவர்கள் அந்த இடங்களில் நின்றதாகத் தெரிவித்துள்ளனர்.

## நாகஷாகி தாக்குதலுக்கு மறுநாள் எடுக்கப்பட்ட படங்கள் கண்டுபிடிப்பு!

இரண்டாம் உலகப்போரின் போது 1945 ஓகஸ்ட் 9ஆம் திகதி நடைபெற்ற அணுகுண்டுத் தாக்குதலில்-பேரழிவுக்குள்ளான நாகஷாகி நகரை, அதற்கு அடுத்த நாள் அமெரிக்க இராணுவம் விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இப்போது கிடைத்துள்ளன.

அழிந்த நாகஷாகி நகருக்கு மேல் 1945 ஓகஸ்ட் 10 ஆம் திகதி அமெரிக்க இராணுவ உளவு விமானம் பறந்து சென்று எடுத்தவையே இந்தப் புகைப்படங்கள்.

அமெரிக்க தேசிய ஆவணக் காப்பகத்தில் இவற்றை ஜப்பான் மேப் சென்டர் கண்டுபிடித்துள்ளது.

அணுகுண்டுத் தாக்குதலுக்குப் பிறகு முதலில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இவையாகத்தான் இருக்குமென்று கருதப்படுகிறது.

அணுகுண்டுத் தாக்குதலின் உடனடிப் பதிவுகளைத் தெரிந்துகொள்ள இந்தப் படங்கள் உதவுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நாகஷாகி அணுகுண்டுத் தாக்குதல் அருங் காட்சியகத்தில் 1945 ஓகஸ்ட் 12ஆம் திகதி எடுக்கப்பட்ட படங்கள்தான் இடம்பெற்றுள்ளன.

# ஆப்கானில் நடந்த தாக்குதலில் 6 அமெரிக்கப் படையினர் காயம்!

ஆப்கானின் கிழக்குப் பகுதியில் அமெரிக்கப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு படையினர் காயமடைந்ததாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் கிழக்கு மாகாணமான குனாரில் இடம்பெற்றது. கடந்த சனிக்கிழமை ஆப்கானின் ஹெல்மன்ட் மாகாணத்தில் அமெரிக்கப் படையினர் ஒருவர் கிளர்ச்சிவாதிகளால் கொல்லப்பட்ட மறுநாள் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதேவேளை, காபூலில் விமான நிலைய வீதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் இரண்டு பொலிஸார் உட்பட மூவர் காயமடைந்தனர்.

ஆப்கானின் கிழக்கு மாகாணமான குனாரில் அமெரிக்கப் படையினர் சென்ற வாகனத் தொடரணி மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் சிறிய ரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் லெப். கேணல் ஜெரி ஓ காரா தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை அமெரிக்க படைவீரர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படும் 7 பேரை நேற்று முன்தினம் கைது செய்ததாகவும், அமெரிக்க இராணுவத் தொடரணி மீதான தாக்குதலில் சுமார் 20 கிளர்ச்சிவாதிகள் ஈடுபட்டனரெனவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இதேவேளை ஆப்கானில் ஐ.நா. வாகனமொன்று விபத்துக்குள்ளான போதிலும் எவரும் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியூடான ஊடுருவலைத் தடுக்க, இரண்டு நாடுகளும் இணைந்து செயற்படவுள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ் மற்றும் ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் இருவரும் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

# விசாரணையின்றி 54 வருடங்கள் சிறையில் வாடியவர் விடுதலை!

கவுகாத்தி —

விசாரணையின்றி 54 ஆண்டுகளாகச் சிறையில் வாடிய முதியவர் 77 ஆவது வயதில் ரூபா ஒன்று மட்டும் செலுத்தி சொந்தப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அவர் என்ன குற்றம் செய்தாரென்று அரசுக்கும் தெரியவில்லை, அவருக்கும் நினைவில்லை.

அசாம் மாநிலம் மோரிகாவுன் மாவட்டம் சில்சங் கிராமத்தைச் சேர்ந்தவர் மசுங் லலுங். இவர் 1951 ஆம் ஆண்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கொடுங்காயம் விளைவித்தாக இந்திய தண்டனைச் சட்டம் 326 ஆவது பிரிவின் கீழ் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தி, கவுகாத்தி சிறையில் அடைக்கப்பட்டார். அவ்வப்போது காவல் நீடிப்புச் செய்யப்பட்டது. வழக்கு விசாரணை ஆரம்பமாகவில்லை.

பின்னர் சிறை அதிகாரிகள் தேச்கூரிலுள்ள மனநோயாளிகள் மருத்துவமனையில் அவரை சிகிச்சைக்குச் சேர்த்தனர். அவர் முழுமையாகக் குணமடைந்து விட்டதாக மருத்துவமனை அதிகாரிகள் 1967 மற்றும் 1996 ஆகிய ஆண்டுகளில் சிறைத் துறைக்கு நினைவூட்டுதல் கடிதம் அனுப்பினர். அதற்கு எந்தப் பதிலும் வரவில்லை. அவரை விடுவிப்பதில் குடும்பத்தினரோ, உறவினரோ, அரசோ, இலவச சட்ட உதவி அமைப்புகளோ, தொண்டு நிறுவனங்களோ, யாரும் அக்கறை காட்டவில்லை.

மனநல காப்பகத்திலேயே ஆண்டுக் கணக்கில் வாடினார். கடந்த மே மாதம் மீண்டும் கவுகாத்தி சிறையில் அடைக்கப்பட்டார். நீண்ட காலமாகத் தேங்கிக் கிடக்கும் வழக்குகள் குறித்து தேசிய மனித உரிமை ஆணைக்குழு ஆய்வு நடத்தியது. அப்போது மசுங் லலுங்கின் பரிதாப நிலை வெளிச்சத்துக்கு வந்தது. கடந்த காலங்களில் அசாம் மாநில நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக அவரைப் பற்றிய ஆவணங்கள் எதுவும் அரசிடம் இல்லை. வயது முதிர்ச்சி காரணமாக அவர் செய்த குற்றம் பற்றி அவருக்கே நினைவில்லை.

பின்னர் இம்மாத ஆரம்பத்தில் அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 77 வயதான அவரை காம்ருத் நீதிபதி எச்.கே.சர்மா ஒரு ரூபா சொந்தப் பிணையில் விடுதலை செய்தார்.

நீதிபதி கூறுகையில் - ஆவணங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக இனியும் அவரைச் சிறையில் வைத்திருப்பது நியாயமில்லை. இதில் நுணுக்கங்களை ஆராயப் புகுந்தால், நீதித்துறைதான் களங்கப்படும். நீதித்துறையோ, நிர்வாகமோ பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது இது ஒருவரின் வாழ்க்கை, உரிமை தொடர்பான பிரச்சினை என்று தெரிவித்தார்.

# வடகொரிய ஆயுதக்கப்பலொன்று இந்தியா நோக்கி வருவதாக தகவல்!

மும்பாய் —

வடகொரிய நாட்டைச் சேர்ந்த கப்பல் ஒன்று பயங்கர ஆயுதங்களுடன் இந்தியாவுக்கு வருவதாக இந்திய கடற்படைப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்தது.

இந்தக் கப்பல் தற்போது மேற்குக் கடற்கரைப் பகுதியில் உலாவி வருவதாகத் தெரியவந்தது. இதையடுத்து கடற்படை உஷார்படுத்தப்பட்டதுடன், மத்திய சுங்கத்துறைக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலின் பெயர் எம்.வி. ஷங்டாக் என்றும், குஜராத் அல்லது மராட்டிய மாநிலத்தில் ஆயுதங்களை இறக்கும் நோக்குடன் இது வருவதாகவும் தெரியவந்துள்ளது.

எனவே, மேற்கு கடற்கரை முழுவதும் அதிகாரிகள் உஷாராகவுள்ளனர். இது பற்றி மத்திய சுங்கத்துறை ஆணையாளர் கே.பி.மிஸ்ரா கூறும் போது -

கடற்படை புலனாய்வுப் பிரிவு எங்களுக்கு கொடுத்த தகவலையடுத்து பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை தீவிரப்படுத்தியிருக்கிறோம் என்று கூறினார்.

ஆயுதக் கப்பல் வரலாமென்று கருதப்படும் அலிபாக், சிவார்தான், வென்குர்லா, ரத்னகிரி, தபோல், கலோஜா, உமார்கான் பகுதிகளில் சுங்க இலாகா அதிகாரிகள் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். படகுகள் மூலமும் கண்காணித்து வருகின்றனர்.

ஆயுதங்களை நடுக்கடலில் படகில் இறக்கி, பின்னர் கரைக்குக் கொண்டு வர வாய்ப்புள்ளது. எனவே, கடற்கரை ஓரம் மற்றும் கடற்கரைச்சாலைகளில் ரோந்து வருகின்றனர்.

கப்பல்கள் எங்காவது தென்பட்டால், உடனே கடற்படைக்கு தகவல் தெரிவியுங்கள் என்று, சுங்க இலாகாவை கடற்படை கேட்டுக்கொண்டுள்ளது. துறைமுகத்தை கவனித்துவரும் ருமேஜிங் புலனாய்வுப் பிரிவும் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு மும்பையில் நடந்த தொடர் குண்டுவெடிப்புக்கு இதுபோல கப்பலில் கடத்திவரப்பட்ட வெடிமருந்துகள்தான் பயன்படுத்தப்பட்டது. அப்போது ஏ.கே.47 துப்பாக்கி போன்ற ஏராளமான ஆயுதங்களும், மும்பைக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்தச் சம்பவம் நடக்கும் முன்பே இதே போல ஆயுதங்கள் கடத்திவரப்படுகிறது என்று கடற்படை எச்சரிக்கை விடுத்திருந்தது.

ஆனால், அப்போது சுங்கத்துறையினர் அதை சரியாக கண்டுகொள்ளவில்லை. இதனால் ஆயுதங்கள் கடத்திவரப்பட்டு பேரழிவுக்கு காரணமாக அமைந்தது.

இப்போது மீண்டும் அதே போன்ற சம்பவம் ஏற்படக்கூடாது என்பதால் மிகவும் உஷாராகவுள்ளனர்.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்கள் 32 பேர் பலி; 50 இற்கும் மேல் காயம்!



பாக்தாத் —

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் கடந்த இரண்டு நாட்களாக கிளர்ச்சிவாதிகள் நடத்திய மூன்று வெவ்வேறான வாகனத் தற்கொலைத் தாக்குதலில் 32 பேர் கொல்லப்பட்டதுடன் 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் தலைநகர் பக்தாத்திலுள்ள பொலிஸ் நிலையத்தின் மீது வெடிமருந்து நிரப்பப்பட்ட லொறியொன்றில் வந்த தற்கொலையாளி மோதி வெடித்ததில், 25 பேர் உயிரிழந்ததுடன் 30 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

ஆனால், இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் பெருமளவானோர் பொலிஸார் என ஈராக் உள்துறை அமைச்சக அதிகாரியொருவர் தெரிவித்தார். அத்துடன், இந்தத் தாக்குதலில் பொது மக்களின் 22 கார்கள் மற்றும் ஒரு வீடு என்பனவும் தீப்பற்றி எரிந்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால், இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் பெருமளவானோர் பொதுமக்களெனவும், அவர்கள் அனைவரும் பொலிஸ் நிலையத்திற்கு வெளியே நின்றவர்களெனவும் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் நிலையத்தைச் சூழ கொங்கிறீட்டினாலான தடைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்தத் தாக்குதல் பொலிஸ் நிலையத்திற்கு வெளியிலேயே நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று பாக்தாத்தின் மத்திய பகுதியில் பொலிஸாரின் சோதனைச் சாவடி மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் ஏழுபேர் உயிரிழந்தனர்.

முதலாவது தாக்குதல் பாக்தாத்திலுள்ள சடீர் ஹோட்டலுக்கு வெளியே நடத்தப்பட்டதில் ஐவர் உயிரிழந்தனர். இந்தக் ஹோட்டல் மீது முன்பொரு தடவையும் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தாக்குதல்



நடத்தப்பட்டு ஒரு மணி நேரத்தின் பின்னர் தலைநகரிலுள்ள அரசாங்க மற்றும் இராஜதந்திரிகள் வசிக்கும் பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் இரண்டு பொலிஸார் உயிரிழந்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## பொதுக்கட்டமைப்புக்கு எதிராக
# ஜே.வி.பி. நடத்தவிருந்த ஊர்வலத்துக்கு அனுமதி மறுப்பு

திருகோணமலை —

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலையில் ஜே.வி.பி. ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் பொலிஸாரின் எதிர்ப்பினை அடுத்து கைவிடப்பட்டது.

வடக்கு - கிழக்கில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்காக உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பை ரத்துச்செய்யக் கோரியும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த ஜே.வி.பி. ஏற்பாடு செய்திருந்தது.

போக்குவரத்துக்கு இடையூறாக ஊர்வலம் நடத்தவேண்டாம் என்றும், அவ்வாறு ஊர்வலத்தை நடத்தினால் அதனைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் பொலிஸார் எச்சரித்தனர்.

அத்துடன், நகரின் பல்வேறு பகுதிகளிலும் பெருமளவான படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் கலகமடக்கும் பொலிஸாரும் மணிக்கூட்டுக்கோபுரத்துக்கு முன்பாகக் குவிக்கப்பட்டனர். இதனால் ஜே.வி.பியினர் ஊர்வலத்தைக் கைவிட்டனர்.

இதன்பின்னர் முற்பகல் 11.15 மணியளவில் மணிக்கூட்டுக்கோபுரத்தின் முன்பாகக் கூடிய 50 இற்கு மேற்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் பொதுக்கட்டமைப்புக்கான தமது எதிர்ப்பை அந்த இடத்தில் நின்றே தெரிவித்துவிட்டுத் திரும்பினர்.

# போருக்கு ஆணை...

தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர் அருணாசலம், முல்லைத்தீவு பங்குத்தந்தை திருமகன் அடிகளார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

பின்னர் - தேசியத் தலைவருக்கான மகஜரை கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் சிவலிங்கம், முல்லை மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் மனோ ஆகியோர் வாசித்த பின்னர்- முல்லை மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் ரங்கனிடம் கையளித்தனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

இந்த நெருக்கடியான வேளையில் எங்களுடைய ஆதரவுக்கரங்களை, தங்களின் மனோ பலத்துக்கான ஆசியினையும் முல்லை மக்களாகிய நாம் வெளிப்படுத்துவதில் நிறைவும், மகிழ்வும் அடைகிறோம்.

30 ஆண்டுகள் தாண்டியும் உறுதி தளராது எம்மையும், எம் இனத்தையும் காத்து - சுவடுகள் மாறாமல் விடுதலையின் பாதையில் தாங்கள் வீறுநடை போடுகிறீர்கள். ஆயுதப் போரால் மட்டுமல்ல அரசியல் யுத்தத்திலும் சர்வதேச சம நிலையைப் பெற்றுவிட்டீர்கள்.

தமிழ் மக்களாகிய நாம் பெருமையடைகிறோம். எமது விடுதலைக்கான போரில் தாங்கள் பட்டுள்ள இன்னல்களை நாம் அறிவோம். அவ்வப்போது தங்களின் இணைந்த சக்தியாக என்றும் எமது கரங்கள் உங்களை இறுகப் பற்றிய வண்ணமே உள்ளன.

எதிரிகள் தேசம் தொடர்ந்தும் எம்மையும், எமது விடுதலைப் போரையும் கொச்சைப்படுத் தும் வகையில் நடந்து கொள்கின்றன. அமைதிக்குரிய மூன்றரை ஆண்டுகளில் திறன்மிக்க போராளிகளையும், தளபதிகளையும் நாம் இழந்துவிட்டோம். உங்களுடைய வரலாற்றுக் காலத்திலேயே எமது விடுதலையின் முழுவடிவத்தையும் நாம் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம்.

போர் ஒப்பந்தம், பேச்சுவார்த்தை, இடைக்கால நிர்வாகம், இறுதியாக சுனாமி நிவாரணக் கட்டமைப்பு என அனைத்தும் சிங்களப் பேரினவாத சக்திகளின் மூர்க்கத்தனமான செயற்பாடுகளால் கலைந்துபோன கனவுகளாகிவிட்டன. எம் இனிய தலைவரே! உடனடியாகப் போரைத் தொடங்குங்கள். நாங்கள் உங்கள் சக்தியாகத் திரண்டு விட்டோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உடன்பாட்டை...

ஆனாலும் ஒரு மாதத்துக்கு எத்தனை நடவை, கிழமைக்கு எத்தனை ...

ஆனால் நாடு நிச்சயமாக மோதல்களின் விழும்பில்தான் நிற்கிறது. அதிகரிக்கப்பட்டிருக்கும் ... இராணுவ ...

# ஹர்த்தாலுக்கு அழைப்பு

திருகோணமலை —

முன்னாள் ஊர்காவற்படை உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை திருகோணமலை தம்பலகாமத்திலும் கந்தளாயிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வட - கிழக்கு சிங்கள அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை திருகோணமலை கண்டி வீதியிலிருந்து தம்பலகாமம் வீதியில் சென்றுகொண்டிருந்த முன்னாள் ஊர்காவற்படை வீரரான எஸ்.டி.தயானந்த (வயது 32) என்பவர் பொற்கேணியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை தம்பலகாமத்திலும் கந்தளாயிலும், பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வட - கிழக்கு சிங்களஅமைப்பு கோரியுள்ளது.

தாம் ஏற்பாடு செய்துள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு தருமாறுகோரி நேற்று மாலை வட - கிழக்கு சிங்கள அமைப்பு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தது.

(10) (04)

# கடற்படையினர் மீது சம்பூர் கடலில் சூடு!

திருகோணமலை —

கடற்படையினரின் படகு ஒன்றின் மீது சம்பூரில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் காலை 9.20 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகவும் எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# ஊர்காவலர் மீது சேருநுவரவில் தாக்குதல்!

திருகோணமலை —

திருகோணமலை - சேருநுவரவில் நேற்றுக்காலை ஊர்காற்படையைச் சேர்ந்த ஒருவர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக படைத்தரப்பு தெரிவித்தது.

நேற்றுக்காலை 6.45 மணியளவில் கால்வாய் ஒன்றில் முகம் கழுவிக் கொண்டிருந்தபோதே வீரரத்ன என்ற ஊர்காவலர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

எனினும் - உடனடியாக மேலும் இரண்டு ஊர்காவற்படையினர் உதவிக்கு வந்து, துப்பாக்கிப்பிரயோகம் செய்து இவரை மீட்டதாகவும் படைத்தரப்பு மேலும் தெரிவித்தது.

# அமைதி...

வும் அமைதிச்சூழலைப் பொறுத்தே அவை செயற்படுத்தப்படும்.

சமாதானம் இல்லையேல் இவ்வாறான திட்டங்களைக் கொண்டு செல்ல முடியாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இலங்கையில் ...

# கடத்தப்பட்ட கப்பல் கப்டன் பாதுகாப்பாக இருக்கிறார்!
## வெளிவிவகார அமைச்சு தகவல்

சோமலியாவில் கப்பல் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடமராட்சியைச் சேர்ந்த கப்பல் கப்டன் மகாலிங்கம் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு அமைச்சின் தொடர்புகள் துறைப் பணிப்பாளர் ஹிமாலி அருணதிலக்க இது தொடர்பாக தகவல் தருகையில்:-

பல முறை கென்யாவில் உள்ள இலங்கைத் தூதுவரினூடாக மகாலிங்கத்துடன் நேரடியாக தொடர்பு கொள்ள முயற்சிக்கப்பட்டது.

கென்ய தூதரகம் உலக உணவுத்திட்டத்தின் ஊடாக இலங்கை கப்பல் கப்டன் தடுத்துவைக்கப்பட்டுள்ள கப்பலுக்கு போக்குவரத்துக்களை மேற்கொண்டு வருகிறது.

எனினும் குறித்த கப்பல் கப்டன் மகாலிங்கத்தை மீட்கும் முயற்சிகள் இன்னமும் வெற்றியளிக்கவில்லை எனவும் ஹிமாலி அருணதிலக்க மேலும் தெரிவித்தார்.

# ஒரு வாரகால விஜயமாக சந்திரிகா சீனா விஜயம்!

கொழும்பு —

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் ஓகஸ்ட் 28 ஆம் திகதி முதல் ஒரு வார காலத்துக்கு சீனாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

சீன ஜனாதிபதி ஹூ ஜின்டாவின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த விஜயம் மேற்கொள்ளப்படுதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் ஒருவார காலம் தங்கியிருக்கும் ஜனாதிபதி செப்ரெம்பர் 3 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

சீனாவில் தங்கியிருக்கும் காலத்தில் ஓகஸ்ட் 29 ஆம் திகதி பீஜிங்கில் நடைபெறவுள்ள பீஜிங் பெண்கள் மாநாட்டில் அவர் பிரதான உரையை ஆற்றவுள்ளார்.

இதனைத் தவிர ஜனாதிபதியின் விஜயத்தின்போது கலாசார, கல்வி போன்ற துறைகளில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலும் பல ஒப்பந்தங்களும் செய்துகொள்ளப்படவுள்ளன.

அத்துடன், அவர் கடந்த ஏப்ரல் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த சீனப் பிரதமர் பரிந்துரைத்த 300 அமெரிக்க டொலர் சீன கடன் திட்டத்தை அமுல்செய்யும் நோக்கிலான பேச்சுக்களையும் நடத்தவுள்ளார்.

சீன கடன்திட்டத்தின் மூலம் நுரைச்சோலை அனல் மின்மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்த ஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தல்!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலை அரசியலமைப்பின்படி இந்த ஆணடிலேயே நடத்தவேண்டுமென்று அரசாங்கத்திடம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு நவம்பரில் நடத்தவேண்டுமென்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் - அடுத்த ஆண்டே நடத்தவேண்டுமென ஆளும் கட்சியும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

எனினும் - அரசியலமைப்பின்படி ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டிலேயே நடத்தப்படவேண்டுமென்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க -

தற்போது அரசாங்கத்தின் மூத்த அமைச்சர் ஒருவரிடம் தெரிவித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது - கருத்தெதுவும் கூற அவர் மறுத்துவிட்டதாக அந்த நாளேடு செய்தி வெளியிட்டது.

தமது முடிவு எதையும் தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக வெளியிடாதுவிட்டாலும் அரசாங்கத்துக்கு அவர் விளக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

# இணைத் தலைமை...

வெளியிட்ட கூட்டறிக்கையில் கூறப்பட்டிருந்த விடயங்கள் பற்றி ஜனாதிபதி விளக்கமளித்தார். கிழக்கில் பாதுகாப்பு நிலைமை சீர்குலைந்திருப்பதும் உண்மைதான்.

விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையை பல தடவைகள் ...

உத்தரவாதம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

பாதுகாப்பு நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகளுடன் உயர்மட்டப் பேச்சுவாத் ...

## உடன்பாட்டை...

ஆனாலும் ஒரு மாதத்துக்கு எத்தனை நடவை, கிழமைக்கு எத்தனை தடவை என்று சில நிபந்தனைகள் விதிக்கப்படலாம். இந்த விடயங்கள் குறித்து தான் இருதரப்புடன் பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள் என்று நம்புகிறேன்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை ஆபத்தில்தான் சிக்கியிருக்கிறது. சீக்கிரத்தில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்ற கேள்வியே இலங்கையர் ஒவ்வொருவரினதும் மனதில் எழுந்துள்ளது.

நாடு யுத்தத்தின் விழும்பில் இருக்கிறது என்று நான் கூறமாட்டேன். ஆனால் நாடு நிச்சயமாக மோதல்களின் விழும்பில்தான் நிற்கிறது. அதிகரிக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்கள், வீதிச் சோதனை போன்றவற்றாலும் நாளாந்தம் சராசரி மூன்று பேர் கொல்லப்படுவதையும் இங்கு கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணும்வரை இந்த நிலை தொடரப்போகிறது. ஆகவே இந்த விடயத்தில் மிக விரைவில் தீர்வு ஒன்று காணப்படுவது நாட்டினதும் மொத்த சமாதானத்துக்கும் அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொதுக்கட்டமைப்பு...

கொண்டோர் - போர் நிறுத்த உடன்படிக்கை மற்றும் சுனாமிப் பொதுக் கட்டமைப்பு என்பன நாட்டைப் பிளவுபடுத்துவதாகவும், இதனால் அரசாங்கம் உடனடியாக இவற்றை ரத்துச் செய்யவேண்டும் எனவும் கோஷம் எழுப்பினர்.

கோட்டே ரயில் நிலையத்துக்கு முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பேசிய ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச-

நடாளுமன்றத்தின் அங்கீகாரம் இல்லாமல் ஜனாதிபதி சந்திரிகா சுனாமி பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார். இது அவர் நாட்டுக்குச் செய்த மிகப் பெரிய துரோகம். பெரும்பாலான மக்கள் இந்த இரண்டு உடன்படிக்கைகளும் செயலிழக்கச் செய்யப்படவேண்டும் என்றே விரும்புகின்றனர். அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு முரண்ணாகச் செய்துகொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கைகளை ரத்துச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஜே.வி.பி மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

பொதுக் கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு முதலாம் மாத பூர்த்தியடைந்த தினத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஜே.வி.பியினரின் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு கோட்டே ரயில் நிலையப் பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அரசாங்கம் உயர்பாதுகாப்பு வலயத்தைப் பிரகடனம் செய்த பின்னர் இப் பகுதியில் நடத்தப்பட்ட முதலாவது ஆர்ப்பாட்டம் இதுவாகும்.

அவை செயற்படுத்தப்படும்.

சமாதானம் இல்லையேல் இவ்வாறான திட்டங்களைக் கொண்டு செல்ல முடியாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இலங்கையில் சுனாமி சுனாமி மீட்புப் புனரமைப்புக்காக யு.எஸ்.எயிட்ஸ் மூலம் 57.2 மில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்கியிருக்கிறது.

அனர்த்தத்தால் சேதமான பாரிய, சிறிய அளவிலான கட்டமைப்பை புனரமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இதன்மூலம் - வீதிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், கடற்தொழில் சார்ந்த கட்டமைப்பு என்பன புனரமைக்கப்படவிருக்கின்றன.

இந்த நிதியத்துக்கான உடன்படிக்கை நேற்று நிதி, திட்டமிடல் அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

## திசை...

சேர்ந்தபோது அது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என அவர்களுக்குத் தெரியவந்தது.

மூன்று மீனவர்களையும் புலிகள் பாதுகாப்பாக திருப்பி அனுப்பிவைத்தனர். ஆனால், இவர்களைப் படையினர் கைது செய்தனர். புலிகளின் பகுதிக்கு ஏதாவது பொருட்களைக் கொண்டு சென்று வழங்கியிருக்கலாம் என்று கூறியே படையினர் இந்த மூவரையும் பிடித்தனர்.

சுப்பர்மடத்தைச் சேர்ந்த இரு மீனவர்கள் தாம் வழிமாறிச் சென்றது குறித்து படையினரிடம் தெரிவித்திருந்தும் இவர்களைக் கைது செய்து பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

பட்டிருந்த விடயங்கள் பற்றி ஜனாதிபதி விளக்கமளித்தார். கிழக்கில் பாதுகாப்பு நிலைமை சீர்குலைந்திருப்பதும் உண்மைதான்.

விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையை பல தடவைகள் மீறியிருக்கி ன்றனர் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீர்ப்பளித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கலகங்களில் ஈடுபடும் கருணா குழுவினருக்கோ, வேறு எவருக்குமோ அரசாங்கம் புகலிடம் அளிக்கவில்லை - உதவிசெய்யவுமில்லை.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனை மேலும்

மேற்கொள்வதற்கும் அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

பாதுகாப்பு நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகளுடன் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தி, போர் நிறுத்த உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்வதற்கு தாம் மேற்கொண்டுள்ள ஆர்வம் பற்றி அரசாங்கம் பல சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளது.

இத்தகைய பேச்சுக்களை ஊக்குவிப்பது ரோக்கியோ மாநாட்டுக்கு இணைத்தலைமை வகித்த நாடுகள் காட்டும் ஆர்வத்தை ஜனாதிபதி பாராட்டியதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புலிகளின் யோசனைகளை...

இந்தச் சந்திப்புக் குறித்து அரச சமாதான செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ஜோன் செனிவிரத்ன கருத்துத் தெரிவிக்கையில் -

அரசின் சார்பில் இந்தச் சந்திப்பில் புதிய யோசனைகள் - புலிகளின் கவனத்துக்காக கண்காணிப்புக்குழு ஊடாக முன்மொழியப்பட்டது.

புலிகளுடன் இந்தப் புதிய பிரேரணை குறித்து கலந்தாலோசித்துவிட்டு மீண்டும் இந்த விடயம் குறித்து எம்முடன் ஆலோசனை நடத்துவர் எனத் தெரி வித்தார்.

அதேவேளை - கண்காணிப்புக் குழுவின் உயரதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்

இந்தச் சந்திப்பு பயனுள்ளதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அமைந்தது. ஆனால், இறுதித் தீர்வு எட்டப்படவில்லை.

இந்த விடயம் குறித்து அரசு - புலிகளிடையே இடைவெளியை மேலும் குறைக்கும் நோக்குடன் அரசதரப்பில் இருந்து மேலும் பயனுள்ள பிரேரணைகள் தரப்பட்டுள்ளன.

அவற்றை நாம் எழுத்துவடிவில் கேட்டிருக்கிறோம். அது எமது கையை வந்தடைந்ததும் புலிகளிடம் சேர்ப்பிக்கப்படும். இது தொடர்பில் புலிகளும் மேலும் பிரேரணைகளை தரக்கூடும். ஆனால், ஒட்டுமொத்தத்தில் இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வுகாண நெருங்கிவந்திருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று நடந்த சந்திப்பின் பின்னர் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் கருத்துத் தெரிவிக்கையில் - நேற்றைய சந்திப்பின் பின் இந்தப் பிரச்சினைக்கு முடிவுகாணக்கூடியதாக இருக்கும் என நம்பிக்கை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.